பக்கங்கள்: 11

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 08 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 08 சனிக்கிழமை 23.11.2024 கதிர் 016



## நாணய நிதிய பிரதிநிதிகள் சஜித்துடன் நேற்று சந்திப்பு

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாசவிற்கும், சர்வதேச நாணய நிதியத்தின் பிரதிநிதிகள் குழுவிற்கும் இடையிலான விசேட சந்திப்பொன்று நேற்று கொழும்பில் இடம்பெற்றது.

இச்சந்திப்பில், சர்வதேச நாணய நிதியத்தை பிரதிநிதித்துவப்படுத்தி அதன் உயர் மட்டக் குழுவின் பிரதானி பீட்டர் ப்ரூவர், துணைப்பிரதானி திருபதி முயவளையைசலயெ ளுஎசைலனணநமெய, வதிவிடப் பிரதிநிதி திருமதி மார்த்தா வோல்டெமிகல் மற்றும் வதிவிட பொருளாதார நிபுணர் மானவி அபேவிக்ரம ஆகியோர் பங்கேற்றிருந்தனர்.

இலங்கை தற்போது எதிர்நோக்கி வரும் வங்குரோத்து நிலையிலிருந்து விடுபடுவதற்கான வழிமுறைகள் தொடர்பில் இங்கு இரு தரப்பினருக்கும் இடையில் நீண்ட கருத்துப் பரிமாற்றம் இடம்பெற்றது.

தற்போது மக்கள் ஆணையால் தெரிவு செய்யப்பட்ட ஆளும்தரப்பும் ஜனாதிபதியும் இருப்பதால், முன்னாள் ☞ 2

## இது ரகசியம் அல்ல!

தமிழ் அரசுக் கட்சி நீதிமன்றத்தில் நிற்கின்றது, அதன் தலைவர் தொடர்பில் குழப்பத்தில் இருக்கின்றது என்று அடிக்கடி நக்கல் கதைகள் பேசி வரும் ரெலோ விரைவில் நீதிமன்றப் படியேறும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது.

ரெலோவின் மத்திய குழுக் கூட்டத்தை அடுத்தவாரம் புதன்கிழமை திருகோணமலையில் காலை 9 மணிக்குக் கூட்டுவது என்று அமைப்பின் தலைமைக் குழு முடிவு செய்திருக்கின்றது. கட்சித் தலைமைக்கு எதிராகக் கிளர்ச்சி செய்து, கட்சித் தலைவரும் செயலாளரும் பதவி விலகி இளைஞர்களுக்கு இடமளிக்கவேண்டும் என்று கோரி வருபவர்களை கட்சியிலிருந்து விலக்குவதற்காகவே இந்தக் கூட்டம் கூட்டப்படுவதாக ரெலோவில் ஒரு பகுதியினர் கொந்தளிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். அப்படி நடந்தால் நீதிமன்றத்தை ☞ 2

## ஏமாற்றிய ஆட்சிகளைப் போன்று தேசிய மக்கள் சக்தி செயற்படாது

### ஜெகதீஸ்வரன் எம்.பி. தெரிவிப்பு

வாக்குறுதிகளை வழங்கி ஏமாற்றிய ஏனைய ஆட்சிகளைப்போல் அல்லாது நாம் வழங்கிய வாக்குறுதிகளை செயல்வடிவிலே எமது ஜனாதிபதி நடைமுறைப்படுத்துவார் என்பதில் முழுநம்பிக்கை இருக்கிறது என்று தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ம.ஜெகதீஸ்வரன் தெரிவித்தார்.

வவுனியாவில் நேற்று ☞ 2

### குற்றங்களோடு தொடர்புடைய

## 298 பொலிஸார் இடைநிறுத்தம்

இந்தவருடத்தில் மட்டும் 298 பொலிஸார் குற்றங்களோடு தொடர்புபட்ட காரணத்தால் பணி இடைநிறுத்தம் செய்யப்படடுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் ☞ 8

## ஐ.தே.க. குழு மீது திடீர் தாக்குதல்

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைமையகமான சிறிகொத்தாவிலிருந்து திரும்பிக் கொண்டிருந்த குழுவினர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மீள்எழுச்சி தொடர்பிலான பிரேரணையை கையளிப்பதற்காகவே இவர்கள் சிறிகொத்தவுக்கு சென்றுள்ளனர். ☞ 2

# பழிவாங்குவதே நோக்கம் அதற்காகவே விசாரணை

### இப்படிச் சொல்கிறார் பிள்ளையான்

**பழிவாங்கல் நோக்கத்துடனேயே என்னை விசாரணைக்கு அழைக்கின்றனர். நல்லாட்சித் தரப்பை 2018 இலேயே மக்கள் நிராகரித்த பின்னர் கோட்டாபயவை ஆட்சியில் அமர்த்த உயிர்த்த ஞாயிறு தாக்குதல் நடத்தப்பட்டது என்பது அடிப்படையற்ற குற்றச்சாட்டு என்று முன்னாள் இராஜாங்க அமைச்சரான பிள்ளையான் எனப்படும் சிவநேசதுரை சந்திரகாந்தன் தெரிவித்தார்.**

**குற்றப்புலனாய்வு திணைக்களத்தில் வாக்குமூலமளிப்பதற்காக நேற்று முன்னிலையானபோது, ஊடகங்களுக்கு கருத்து வெளியிடும் போது இதனைத் தெரிவித்தார்.**

**அங்கு அவர் மேலும் குறிப்பிடுகையில், சனல் 4 வெளியிட்ட காணொளி தொடர்பில் அருட் தந்தையொருவரால் அளிக்கப்பட்ட முறைப்பாட்டுக்கமையவே சீ.ஐ.டியில் முன்னிலையாகுமாறு எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளது. முன்னாள்** ☞ 2

## 35 எம்.பிக்கள் வீடுகளுக்கு விண்ணப்பம்

நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கான மாதிவெலவில் உள்ள உத்தியோகபூர்வ வீடமைப்புத்தொகுதியில் வீடுபெறுவதற்காக 35 புதிய நாடாளுமன்ற உறுப்பினர்கள் விண்ணப்பித்துள்ளனர்.

டிசெம்பர் 3 புதிய நாடாளுமன்ற உறுப்பினர்களுக்கு இந்த வீட்டுத் தொகுதியிலிருந்து இடங்கள் ஒதுக்கப்படும் என்று நாடாளுமன்ற அலுவலகம் தெரிவித்தது.

கொழும்பில் இருந்து நாற்பது ☞ 8

## ஐ.நா. சட்டக் குழுவில் இலங்கைக்கும் இடம்

ஐக்கிய நாடுகள் பொதுச் சபையினால் சர்வதேச வர்த்தகச் சட்டம் தொடர்பான ஐ.நா ஆணைக்குழுவிற்கு தெரிவு செய்யப்பட்ட 31 உறுப்பினர்களில் இலங்கையும் உள்ளடக்கப்பட்டுள்ளது.

சர்வதேச வர்த்தகச் ☞ 2



## ரணிலுக்காக கழுத்தை நீட்டி இருக்கிறேன் என்னை கட்சியிலிருந்து நீக்கவே மாட்டார்

### *ரவி கருணாநாயக்க நம்பிக்கை*

ரணில் விக்ரமசிங்க என்னை கட்சியில் இருந்து நீக்க ஒருபோதும் நடவடிக்கை எடுக்கமாட்டார். அந்தளவுக்கு அவருக்காக நான் எனது கழுத்தை நீட்டி இருக்கிறேன். எனக்கு எதிராக ரணில் விக்ரமசிங்க எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை என்று புதிய ஜனநாயக முன்னணியின் தேசியப்பட்டியல் நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணா ☞ 2

## இன, மதவாதக் கருத்தைக் கூறி மக்களை ஏமாற்ற நினைக்காதீர்

### விமல் வீரவன்சவுக்கு கனடிய தமிழர் பேரவை பதிலடி

இன, மதவாதக்கருத்துக்களை தெரிவித்து மக்களை ஏமாற்ற நினைப்பதை தவிர்த்து முறையான முன்னேற்றகரமான அனைவரையும் உள்ளடக்கிய அரசியலில் ஈடுபடுவதே சிறந்தது என்று கனடியத் தமிழர் பேரவையின் தலைவர் குமார் இரத்தினம் தெரிவித்துள்ளார்.

நாம் ஜனாதிபதி மற்றும் தேசிய மக்கள் சக்திக்கு அண்மையில் எழுதியிருந்த கடிதத்தில் இனவாத பிரிவினைவாத கருத்துக்கள் இருப்பதாக சொல்லப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

கனடிய தமிழர் பேரவை போன்ற அமைப்புக்கள் இனவாத பிரிவினைவாத கோரிக்கைகளை முன்வைக்கின்றன என்று விமல் வீரவன்ச அண்மையில் ☞ 8

## வெளிநாட்டு மின்சார வாகன இறக்குமதியிலும் குழறுபடிகள்

மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்காக வெளிநாட்டு ஊழியர்களுக்கு (தேசிய வீராங்கனைகள்) வழங்கப்பட்ட ஆயிரத்துக்கும் மேற்பட்ட உரிமங்கள் கடந்த காலங்களில் ☞ 2

## குடும்ப வன்முறையை நிறுத்த கடுமையான சட்டங்கள் தேவை

### புதிய மகளிர் விவகார அமைச்சரிடம் கோரிக்கை

இலங்கையில் பெண்கள் மீதான குடும்ப வன்முறை மிக அதிகளவில் காணப்படுகின்றது. கணவன், மாமனார், மாமியார் என வீட்டில் உள்ளவர்களால் பெண்கள் அதிகளவில் குடும்பவன்முறைக்கு உள்ளாகின்றனர். சில வீடுகளில் பெண்கள் பெண்களாலேயே துன்புறுத்தப்படுகின்றனர். குடும்பங்களில் உள்ள சிறார்களின் நலன்கருதி குடும்பவன்முறையை நிறுத்துவதற்கேற்ற வகையிலான கடுமையான சட்டங்கள் அமுலாக்கப்படவேண்டும் என்று பெண்கள் மற்றும் சிறுவர் ☞ 2

காலைக்கதிர்
Kalaikkathir

## இனி இது .....

நாடுவது என்பதில் அவர்கள் சர்வ நிச்சயமாக இருக்கிறார்கள். தலைவர் செல்வத்திற்கும் செயலாளர் கருணாகரனுக்கும் சுருக்குத் தடம் போட்டுவிட்டுக் காத்திருக்கிறார்கள்.

அவர்களின் கொந்தளிப்புக்குக் காரணம் இருக்கின்றது. நவம்பர் 20 ரெலோவின் தலைமைக் குழுக் கூட்டம் 'சூம்' மூலம் கூட்டப்பட்டுள்ளது. செயலாளர் கருணாகரன் வட்ஸ்அப் மூலம் செய்தி அனுப்பி தலைமைக் குழுவின் இந்தக் கூட்டத்தைக் கூட்டியுள்ளார். ஆனால், தலைமைக்கு எதிரான கிளர்ச்சியில் முன்னணி வகிக்கும் 40 வருடங்களாகக் கட்சியில் தொடர்ந்து இருக்கும் வடக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினரும் கட்சியின் நிர்வாகச் செயலாளருமான விந்தன், கட்சியின் உபதலைவரும் கல்முனையை கட்சியின் பலமிக்க தளமாக வைத்திருப்பவருமான ஹென்றி மகேந்திரன், முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் வினோ ஆகியோர் இந்தக் கூட்டத்திற்குத் திட்டமிட்டு அழைக்கப்படவில்லை.

இவர்கள் அழைக்கப்படாததை அடுத்து இவர்களுக்கு எதிராகத்தான் இந்தக் கூட்டம் என்பதைப் புரிந்துகொண்ட பலரும்கூட கூட்டத்தில் பங்கேற்கவில்லை. இப்படி பலரைத் திட்டமிட்டு வெட்டியும் பலர் பங்கேற்காமலும் விட்ட இந்தத் தலைமைக் குழுக் கூட்டத்தில், கட்சியின் யாழ். மாவட்ட அமைப்பாளரான விந்தனை உடனடியாகக் கட்சியைவிட்டுத் தூக்கவேண்டும் என்று ஜனநாயகத் தமிழ்த் தேசியக் கூட்டணியின் சார்பில் ரெலோவின் வேட்பாளராகப் போட்டியிட்டவரும் ககொள்ளைட்சியின் பொருளாளரும் தலைவர் செல்வத்திற்கு மிகவும் வேண்டப்பட்டவரும் அவரின் மதியுரைஞருமான சுரேன் குருசாமி ஒரு பிரேரணையை முன்வைத்துள்ளார்.

பொதுத் தேர்தல் காலத்தில் விந்தன் செய்தியாளர்கள் சந்திப்பை நடத்தி தலைவர் மற்றும் செயலாளர் மீது கடும் விமர்சனங்களை முன்வைத்திருந்தார். இதனால் தலைமைக் குழுவில் தனது பிரேரணைக்கு ஆதரவு கிடைக்கும் என்று குருசாமி எதிர்பார்த்திருப்பார் போலும். ஆனால் நடந்தது அதற்கு நேர்மாறாக இருந்தது. 40 வருடங்களாக கட்சிக்காக உழைக்கும் விந்தன், கொள்ளையடிக்கவில்லை கப்பம் வாங்கவில்லை போதைப்பொருள் கடத்தவில்லை கொலை செய்யவில்லை காட்டிக்கொடுக்கவில்லை ஏமாற்றி அடித்தவர் சொத்தைப் புடுங்கவில்லை அப்படியிருக்கும்போது அவர் மீது எப்படி ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கமுடியும் என்று கூட்டம் தலைமைக்கு எதிராகவே திரும்பும் நிலையை அடைந்திருக்கிறது.

அது பத்தாது என்று இப்படி உங்களுக்கு வேண்டியவர்களை மட்டும் அழைத்து வைத்துக்கொண்டு தலைமைக் குழு எந்த நடவடிக்கையும் எடுக்க முடியாது, எதுவாக இருந்தாலும் உடனடியாக பொதுக் குழுக் கூட்டத்தைக் கூட்டுங்கள் அங்கு வைத்துப் பேசிக்கொள்ளலாம் என்று பலரும் கொதித்தெழவே நவம்பர் 27, மாவீரர் தினத்திலன்று திருகோணமலையில் பொதுக் குழுக் கூட்டத்தைக் கூட்டுவதாக முடிவு செய்துகொண்டு தலைமைக் குழுக் கூட்டத்தை நிறைவு செய்துவிட்டார்கள்.

மாவீரர் தினத்திலன்று கூட்டம் என்று அறிவித்ததன் மூலம் அந்தக் கூட்டத்தை எப்படியும் கூட்டமாட்டார்கள் என்று கட்சிக்காரர்களே நம்புவது ஒருபுறம் இருக்க, அடுத்த பொதுக் குழுக் கூட்டத்தையும் விந்தன், ஹென்றி, வினோ என்று தமக்கு வேண்டப்படாதவர்களைத் தவிர்த்துவிட்டுக் கூட்டி அதில் அவர்களுக்கு எதிராக ஒரு தீர்மானத்தை எடுப்பதாகக் கட்சித் தலைவர்கள் நடிப்பார்களாக இருந்தால் அதை எதிர்த்து நீதிமன்றத்தை நாடி கட்சியை அடியோடு முடக்கிவிடுவது என்பதில் கிளர்ச்சியாளர்கள் தீவிரமாக இருக்கின்றனர்.

"என்ன உங்களுக்கு எதிராக கட்சியில் ஒழுக்காற்று நடவடிக்கை எடுக்கப்போகிறார்கள் என்று கதை வருகின்றதே" என்று விந்தனிடம் கேட்டேன்.

"நானும் அதுபற்றிக் கேள்விப்பட்டேன். கட்சியின் 40 வருடகால இடைவிடாத உறுப்பினரான என்னை விட்டுவிட்டு ஒரு கூட்டத்தில் எனக்கெதிராக நடவடிக்கை எடுத்தால் நான் நிச்சயமாக நீதிமன்றம் செல்வேன், நான் மட்டுமல்ல வேறுபலரும் நீதிமன்றம் செல்லத் தயாராகத்தான் இருக்கின்றோம்" என்றார் விந்தன்.

நான் முன்னரும் ஒரு தடவை இந்தப் பத்தியில் சுட்டிக்காட்டியிருக்கின்றேன், கூட்டமைப்புக்கு ஒரு சுமந்திரன் என்றால் ரெலோவுக்கு ஒரு சுரேன். பிய்த்து உதறாமல் மறுவேலை பார்க்க மாட்டார் போல....

.......................................................................

மருத்துவர் நாடாளுமன்றத்தில முதல் நாளே ஆடிய ருத்திர தாண்டவத்தில திணறிப் போயிருக்கும் சிங்களத் தரப்புக்களுக்கு இப்போதைக்கு முக்கிய இலக்கு அவர்தான். எதிர்க் கட்சித் தலைவராக இருந்தாலும் சிங்களத் தலைவர் அல்லவா, அவரின் கதிரையைச் சவாலுக்குட்படுத்துவதா என்று கிளர்ந்தெழுந்திருக்கின்றன சிங்கள ஊடகங்களும் சிங்களத் தரப்பினரும்.

இதையடுத்து மருத்துவர் தனது அரச பதவியிலிருந்து விலகாமல் தேர்தலில் போட்டியிட்டமை தவறு, எனவே அவரது நாடாளுமன்ற உறுப்பினர் பதவி பறிக்கப்படவேண்டும் என்று கொந்தளிக்கத் தொடங்கியிருக்கிறார்கள். இது தொடர்பில் சிங்கள ஊடகங்கள் செய்திகளையும் வெளியிட்டுள்ளன.

மருத்துவராக இருக்கும்போதே அவர் நாடாளுமன்ற உறுப்பினராக பதவியேற்றுக் கொண்டதே அவர் செய்த குற்றம் என்று கண்டுபிடித்திருக்கிறது ஒரு பத்திரிகை.

இலங்கைச் சட்டத்தின் பிரகாரம் பாராளுமன்ற உறுப்பினர் ஒருவர் அரச பணியாளராக இருந்துகொண்டு நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகிக்க முடியாது. இதை வைத்து சாவகச்சேரி புகழ் மருத்துவரின் பதவியைப் புடுங்குவதற்கான நடவடிக்கைகள் தீவிரம் அடைந்திருக்கின்றன.

இதற்கு முன்னர் ராஜித சேனாரத்னவும் தனது தொழிலை விட்டு விலகாமல் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியை வகித்ததற்காக அவர் பதவியில் இருந்து நீக்கப்பட்டார் என்று தெரிவித்திருக்கும் சிங்களப் பத்திரிகையொன்று அதுபோன்றே சாவகச்சேரி புகழ் மருத்துவருக்கும் நிகழும் என்று ஆரூடம் கூறியிருக்கின்றது.

மருத்துவர் நாடாளுமன்றப் பதவியை தனது 'தங்கத்திற்கு' கொடுத்துவிட்டு மாகாண சபை மீது கண்வைத்து தன்கொரு கட்சியைக் கட்டி வளர்ப்பதில் குறியாக இருப்பதால், இந்த விவகாரங்களையெல்லாம் அவர் தனது 'லெஃப்ட் கான்டில்' வலு 'கூல்' ஆகக் கையாள்வார், பதவி பறிபோவது குறித்துக் கவலைப்படமாட்டார் என்று எதிர்பார்க்கலாம்.

இருந்தாலும் மருத்துவரால் சீண்டப்பட்டிருக்கும் சிங்களம் அவரின் பதவியைப் பறிப்பதோடு மட்டும் நின்றுவிடும் என்று எதிர்பார்ப்பதற்கு இல்லை.

முதலாவது நாடாளுமன்ற அமர்வில் வந்து அமர்ந்ததுமே தனது முகப்புத்தக நேரலை மூலமாக வைத்தியர் அருச்சுனா காட்டிய அலப்பறைகளை மையமாகக் கொண்டு சிஐடியிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

அந்த நேரலையில் வைத்தியர் சர்ச்சைக்குரிய வார்த்தைகளைப் பயன்படுத்தினார் என்பதே குற்றச்சாட்டு. 'அரகலய' போராட்டத்தின் உறுப்பினர்களும் சட்ட வல்லுநர்களும் இந்த முறைப்பாட்டை வழங்கியுள்ளனர். மருத்துவர் தனது நேரலையைத் தொடங்கும்போதே ''தமிழீழத்திற்குள் வந்தாச்சு'' என்று சொன்னதுதான் இவர்களுக்குக் குற்றமாகத் தெரிந்திருக்கிறது. இலங்கை நாடாளுமன்றத்தை மருத்துவர் தமிழீழம் என்று சொன்னார் என்றால் அது முழு இலங்கையையும் அவர் தமிழீழமாகவே பார்க்கிறார், நல்லிணக்கத்தின் மிக உச்ச வெளிப்பாடு என்றுதான் பார்க்கவேண்டுமே தவிர, அதைப் பிரிவினையாகப் பார்க்க என்ன இருக்கிறது என்று தெரியவில்லை. ஆக மொத்தத்தில் மருத்துவரால் சீண்டப்பட்டிருக்கும் சிங்களம் அவரைக் குதறி எடுக்காமல் ஓயாது என்பது புரிகிறது.

"வைத்தியர் அருச்சுனாவின் செயலானது இலங்கை அரசமைப்புக்கும் சட்டத்துக்கும் முரணானது. அருச்சுனாவுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்க வேண்டும் என நாங்கள் குற்றப் புலனாய்வு பிரிவில் முறைப்பாடு ஒன்றை மேற்கொண்டோம்.

இதுபோன்ற செயற்பாடுகள் நாடாளுமன்றத்தில் கண்டிக்கப்படவேண்டும். ஆகவே சபாநாயகர் உடனடியாக இதற்கு நடவடிக்கை எடுக்கவேண்டும் எனவும் நாங்கள் கேட்டுக் கொள்கின்றோம்" என்று அவருக்கு எதிரான முறைப்பாட்டாளர்கள் தெரிவித்துள்ளனர்.

மருத்துவரே உறுதியளித்தபடி தரமான சம்பவங்களுக்குக் காத்திருக்கலாம் என்றுதான் படுகிறது. "யாம் பெற்ற இன்பம் பெறுக இவ்வையகமே" என்று நாங்கள் ரசித்துக்கொண்டிருக்கலாம்.

**இடிமின்னல்**
(idiminnal@gmail.com)

## பழிவாங்குவதே ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்சவை ஆட்சியில் அமர்த்துவதற்காகவே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டதாக அஸாத் மௌலானா குறிப்பிட்டுள்ளார்.

உண்மையில் 2015இல் நல்லாட்சி ஆளும்தரப்பு அதிகாரததைப் பொறுப்பேற்றதன் பின்னர் 2018இல் நடத்தப்பட்ட உள்ளூராட்சிமன்றத் தேர்தலில் ஸ்ரீலங்கா பொது ஜன பெரமுனவே வெற்றி பெற்றது. ஆனால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்கள் 2019ஆம் ஆண்டுதான் மேற்கொள்ளப்பட்டன. நல்லாட்சியை 2018ஆம் ஆண்டே மக்கள் புறக்கணித்துவிட்டனர்.

அந்த வகையில் 2018இல் கோட்டாபய ராஜபக்ச மாத்திரமல்ல, பொதுஜன பெரமுனவின் வேட்பாளராக யாரை நியமித்திருந்தாலும் அவர் வெற்றி பெற்றிருப்பார். மக்களின் மனநிலை அவ்வாறுதான் காணப்பட்டது. எனவே உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுடன் இதனை தொடர்புபடுத்துவது அடிப்படையற்றது.

எனக்கும் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களுக்கும் எவ்வித தொடர்பும் இல்லை. எனவே யாரையாவது மகிழ்ச்சிப்படுத்தும் நோக்கில் குற்றப்புலனாய்வு பிரிவின் பணிப்பாளர்கள் செயற்படக்கூடாது. எனக்கு எந்தப் பயமும் இல்லை. பழிவாங்கல் நோக்கத்துடனேயே என்னை விசாரணைக்கு அழைக்கின்றனர். ஆனால் உயிர்த்த ஞாயிறு தாக்குதல்களின் பிரதான சூத்திரதாரி யார் என்பதை கண்டறிய வேண்டியது ஆளும்தரப்பின் பொறுப்பாகும்.

ஷானி அபேசேகர, ரவி செனவிரத்ன போன்றவர்களிடம் கேட்க விடயங்களை என்னிடம் கேட்கக்கூடாது. அவ்வாறில்லை என்றால் இது தொடர்பில் ஜனாதிபதியிடமே கேட்கவேண்டும். புலனாய்வுப் பிரிவினர் ஜனாதிபதியின் கண்களைப் போன்று இருக்கவேண்டும். அவர்கள் உறங்கிக் கொண்டிருந்தால் எம்மால் எதுவும் செய்ய முடியாது. சிறைச்சாலையிலிருந்து கொண்டு இவ்வாறானதொரு சதித்திட்டத்தை திட்டமிட வேண்டிய அவசியம் எனக்கு இல்லை என்றார்.

## ஐ.நா. ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சட்டம் தொடர்பான ஐக்கிய நாடுகளின் ஆணைக்குழுவில் நவம்பர் 20 இடம்பெற்றது, இலங்கை ஆசிய பசுபிக் குழுவிலிருந்து போட்டியிட்டது, அங்கு இலங்கை 177 வாக்குகளைப் பெறமுடிந்தது. இந்த எண்ணிக்கையான வாக்குகள் ஆசிய பசுபிக் பிராந்தியத்தில் ஒரு நாடு பெற்ற அதிக வாக்குகளாகும். ஆணையத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட 31 உறுப்பினர்களில் இரண்டாவது அதிக வாக்குகளும் ஆகும்.

ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் இருந்து மலேசியா, பிலிப்பைன்ஸ், சிங்கப்பூர், வியட்நாம், சீனா, ஜப்பான் மற்றும் கொரியா குடியரசு ஆகிய நாடுகளும் இந்த ஆணையத்திற்கு தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளன.

உறுப்பினர் சேர்க்கை 6 ஆண்டுகளுக்கு செல்லுபடியாகும். சர்வதேச வர்த்தகத்திற்கான தடைகளை நிவர்த்தி செய்வது இதன் நோக்கம்.

## வெளிநாட்டு....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தவறாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன் என்று தேசிய கணக்காய்வு அலுவலகம் நடத்திய விசேட தணிக்கையில் தெரியவந்துள்ளது.

இதனால் வெளி நாடுகளில் பணிபுரியும் தகுதி வாய்ந்த பலர் உரிமம் பெற முடியாமல் தவித்துவருகின்றனர் என்று கணக்காய்வாளர் நாயகம் பி.சி.விக்கிரமரத்ன தெரிவித்தார்.

நாட்டுக்கு அந்நியச் செலாவணியை முறையான வழியில் அனுப்பும் வெளிநாட்டு ஊழியர்களுக்கு மின்சார வாகனங்களை இறக்குமதி செய்வதற்கான உரிமம் வழங்கும் நடவடிக்கை கடந்த ஆட்சியில் ஆரம்பிக்கப்பட்டது. இந்தத் திட்டம் தொடர்பாக கண்காய்வுத் திணைக்களம் ஒரு மாத காலமாக ஆய்வு நடத்தியது.

உரிமம் வழங்கும் திட்டத்தில் மேலும் பல முறைகேடுகள் நடந்துள்ளதாக தேசிய கணக்கு தணிக்கை அலுவலகம் கூறுகிறது.

இந்த விசேட கணக்காய்வு அறிக்கை அண்மையில் கணக்காய்வாளர் நாயகத்தினால் நாடாளுமன்றத்தில் கையளிக்கப்பட்டது.

இந்த அறிக்கை அடுத்த வாரம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும்.

தணிக்கை அறிக்கை மூலம் அரசுக்கு பல பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளதாக தெரியவருகிறது.

## குடும்ப....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

விவகார அமைச்சர் சரோஜா போல்ராஜிடம் டன்ஸ்டன் மணி கோரிக்கை விடுத்துள்ளார்.

இது குறித்து அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

நடந்து முடிந்த நாடாளுமன்ற பொதுத் தேர்தலில் நாட்டின் அனைத்துப் பகுதி மக்களினதும் அமோக ஆதரவுடன் ஆட்சிக்கு வந்துள்ள தற்போதைய அரசு குடும்பங்களில் பெண்கள் மீது மேற்கொள்ளப்படும் வன்முறைகளை நிறுத்துவதற்கு உடனடி நடவடிக் கைகளை மேற்கொள்ள வேண்டும். ஏனெனில் குடும்பங்களில் இடம்பெறும் வன்முறைகள் அக்குடும்பச் சூழலில் வளரும் சிறார்களை பெருமளவில் பாதிக்கின்றது. மட்டுமன்றி அவர்களை உளரீதியாகவும் பாதிக்கின்றது. எனவே இது குறித்து உடனடி நடவடிக்கை எடுக்கப்பட வேண்டும்.

அநேக குடும்பங்களில் தமது உறவினர்களால் வன்முறைக்கு உள்ளாக்கப்படும் பெண்கள் தம்மைக் காப்பாற்றிக் கொள்ளும் வழி தெரியாமல் பரிதவிக்கின்றனர். அவ்வாறு பாதிக்கப்படும் பெண்கள் தங்கள் மீதான வன்முறைகளுக்கு எதிராக உடனடி நிவாரணம் பெறும் வகையில் உடனடி தொலைபேசி இலக்கமொன்றும் அறமுகப்படுத்தப்பட வேண்டும். அவ்வாறான தொலைபேசி இலக்கமொன்று இன்றைய காலத்தின் தேவையாக உள்ளது - என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## ஏமாற்றிய....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தேசியமக்கள் சக்தியின் வன்னிமாவட்ட பிரதான அலுவலகத்தை திறந்துவைத்துவிட்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் அங்கு மேலும் தெரிவித்ததாவது:

76 வருடங்களுக்குப் பின்னர் ஊழலற்ற நேர்மையான ஓர் ஆளும்தரப்பை அமைத்திருக்கிறீர்கள். எமது வெற்றியை உறுதிப்படுத்திய அனைத்து மக்களுக்கும் நன்றியைத் தெரிவித்துக்கொள்கின்றோம். எமது மக்களுக்கான சேவை இன்றிலிருந்து ஆரம்பமாகின்றது. அனைத்து மக்களையும் உள்வாங்கி சம வாய்ப்புக்களையும் உரிமையையும் பெற்றுக்கொள்வதில் நாங்கள் முன்னிலையில் இருப்போம்.

அதேபோல வளமான தேசத்தையும் அழகான வாழ்க்கையும் அமைப்பதற்கு நாட்டு மக்கள் எங்களோடு ஒத்துழைக்கவேண்டும். எதிர்காலத்தில் எம்மால் செய்யப்படும் அனைத்து வேலைத் திட்டங்களும் மக்கள் மயமானதாகவே இருக்கும்.

எமது தேர்தல் அறிக்கையில் கூறப்பட்ட விடயங்களை நிறைவேற்றுவதற்கு நாங்கள் முன்னின்று உழைப்போம். காணாமல் ஆக்கப்பட்டோர் விடயம் மற்றும் தமிழ் மக்களிடம் இருக்கும் பிரச்சினைகள் தொடர்பாக ஜனாதிபதி ஏற்கனவே தெளிவுபடுத்தியுள்ளார். படிப்படியாக அதற்கான நடவடிக்கைகள் இடம்பெறும்.

வாக்குறுதிகளை வழங்கி ஏமாற்றிய ஏனைய ஆட்சிகளைப் போல் அல்லாது நாம் வழங்கிய வாக்குறுதிகளை செயல்வடிவிலே எமது ஜனாதிபதி நடைமுறைப்படுத்துவார் என்பதில் முழுநம்பிக்கை இருக்கிறது. நாங்களும் அதற்கான ஒத்துழைப்புக்களை வழங்குவோம் என்றார்.

## ஐ.தே.க. ....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அதனை வழங்கிவிட்டு திரும்பும் போது நான்கு வாகனங்களில் வந்த குழுவினரால் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற உறுப்பினர் ரவி கருணாநாயக்கவின் ஆதரவாளர்கள் குழுவினராலேயே இந்தத் தாக்குதல் மேற்கொள்ளப்பட்டது என்று பாதிக்கப்பட்டவர்கள் அவர்கள் குற்றம் சுமத்தியுள்ளனர்.

## நாணய....

### (முதலாம் பக்கத் தொடர்ச்சி)

ஆட்சியில் கையெழுத்திட்ட ஒப்பந்தத்தை மாற்றியமைத்து, மக்கள் சார் உடன்பாட்டை எட்டுவதற்கு சர்வதேச நாணய நிதியம் கவனம் செலுத்தவேண்டும் என்று இதன்போது

தொடர்ச்சி 8ம் பக்கம்....

# இலக்கை நிர்ணயித்துச் செயற்படுமாறு அதிகாரிகளுக்கு வடக்கு ஆளுநர் பணிப்பு



வடக்கு மாகாணத்தில் பின்தங்கியுள்ள பிரதேசங்களை கல்வியால்தான் அபிவிருத்தி செய்ய முடியும். அதைக் கவனத்தில் எடுத்து அதிகாரிகள் மற்றும் ஆசிரியர்கள் பணியாற்றவேண்டும். எந்தவொரு விடயத்திலும் கண்காணிப்பும், தொடர் நடவடிக்கையும் இருந்தால் மாத்திரமே அதில் வெற்றி சாத்தியம். அதைப் புரிந்து கொண்டு அதிகாரிகள் செயற்பட வேண்டும். இவ்வாறு வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்தார்.

வடக்குமாகாணகல்விபண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் துறைசார் மீளாய்வுக் கூட்டம் கடந்த வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்தில் ஆளுநர் தலைமையில் இடம்பெற்றது.

கூட்டத்துக்கு தலைமையேற்று ஆரம்ப உரையாற்றிய ஆளுநர் –

விஞ்ஞானப் பிரிவை உயர்தரத்தில் தெரிவு செய்யும் மாணவர்கள் சிலர், தமது பிரதேச பாடசாலைகளில் அந்தக் கற்கை நெறியை படிப்பிப்பதற்குரிய ஆசிரியர்கள் இல்லாமல் யாழ்ப்பாணம் உள்ளிட்ட வேறுநகரங்களுக்குச் சென்று அங்கு தங்கியிருந்து படிக்கின்றனர்.

இவ்வாறுபடிக்கும்மாணவர்களில்சிலர்,கல்வியை ஒழுங்காகத் தொடராது தவறான வழியில் செல்லும் சம்பவங்களும் இடம்பெற்றிருக்கின்றன. எனவே, சகல பாடசாலைகளிலும் விஞ்ஞானப் பிரிவை உயர்தரத்தில் மாணவர்கள் தெரிவு செய்தால், அதைக் கற்பிப்பதற்கு ஆசிரியர் இருப்பதை உறுதி



செய்யவேண்டும்.

பாடசாலையில்நடக்கும்எந்தவொரு நிகழ்வுக்கும் மாணவர்களிடமோ, ஆசிரியர்களிடமோ எந்தவொரு கட்டணமும் அறவிடக் கூடாது. அரசாங்கத்தின் சுற்றறிக்கையும் அதைத் தெளிவாகக் குறிப்பிட்டுள்ளது. கட்டண அறவீடுகள் நடக்காமல் இருப்பதை கல்வி அமைச்சின் செயலர் கவனித்துக்கொள்ளவேண்டும் என்று ஆளுநர் பணித்தார்.

பாடசாலைகளுக்கு நேரடியாக வெளிநாட்டு உதவிகள் கிடைக்கப்பெறுகின்றன. ஆனால் அவற்றில் பல இடங்களில் வெளிப்படைத்தன்மை இல்லை. இது ஊழல் மோசடிக்கு வழிவகுக்கின்றது. இதைக் கண்காணிப்பதற்கு இறுக்கமானபொறிமுறைஉடனடியாக உருவாக்கப்படவேண்டும்எனஆளுநர் கேட்டுக்கொண்டார்.

ஆசிரியர்கள்பலர்கல்விஅலுவலகங் களுக்குச் சென்றால் அவர்களை அதிகாரிகள்சந்திப்பதில்லைஎன்றமுறைப் பாடுகள் கிடைக்கப்பெறுகின்றன. அவ்வாறு செயற்படக்கூடாது. அவர்களுக்கு சேவையாற்றுவதற் காகத்தான் நாங்கள் இருக்கின்றோம். எனவே ஆசிரியர்கள் சொல்வதை பொறுமையாகக் கேட்டு உரிய நடவடிக்கைகளை எடுக்கவேண்டும் என்று ஆளுநர் அறிவுறுத்தினார்.

ஆசிரியர்களுக்கானஇடமாற்றங்கள் வழங்கப்படும்போது திறமையான ஆசிரியர்களுக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும். வடக்கு மாகாணம் 2030 ஆம் ஆண்டு கல்வியில்முதலிடத்துக்குவரவேண்டும் என்ற இலக்கை நிர்ணயித்து பயணிக்கவேண்டும்.

அதைநோக்கிஅடுத்தடுத்தஆண்டு களில் முன்னேறிச் செல்லவேண்டும் எனக்குறிப்பிட்ட ஆளுநர், கடந்தகாலங் களைப்போன்று கல்வித்துறையில் இனி அரசியல் தலையீடுகள் இருக் காது என ஜனாதிபதி அவர்களும் உறுதியளித்திருக்கின்றார்.

எனவே அதிகாரிகள் துணிந்து பணியாற்றமுடியும். கடந்தகாலங்களில் அதிகாரிகள் பழிவாங்கபட்ட சம்பவங் களும் இனி நடக்காது. எனவே மக்கள் நம்பும் வகையில் அரச அதிகாரிகளின் சேவைகள் இருக்கவேண்டும் என்றார் ஆளுநர்.

வடக்குமாகாணகல்விஅமைச்சின் செயலர் ம.பற்றிக் டிறஞ்சன் குறிப்பிடும் போது –

வடக்கு மாகாணத்தில் 12 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்ற நிலைமைஇருக்கின்றது. தேசியரீதியில் கூட 17 மாணவர்களுக்கு ஓர் ஆசிரியர் என்றநிலைமைதான் உள்ளது. இங்கு பாடரீதியாகவே ஆசிரியப்பற்றாக்குறை இருக்கின்றது. கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் தேசிய ரீதியில் முதலிடத்திலிருந்தாலும், சாதாரண தரப் பரீட்சையில் 8ஆம் இடத்தில்தான் வடக்கு மாகாணம் உள்ளது. இதில் கூடிய கவனம் செலுத்த வேண்டும்.

இதற்குஆசிரியர்களின்கற்பித்தலை கண்காணிப்பதற்கான பொறிமுறை வலுவாக இல்லை என்பதும் ஒரு காரணம் எனச் சுட்டிக்காட்டியதுடன் அதைக் கண்காணிப்பதற்கும் தொடர் நடவடிக்கை எடுப்பதற்கும் உரிய பணியைஆற்றும்ஆசிரியஆலோசகர் களுக்கு வடக்கு மாகாணத்தில் பாரிய வெற்றிடம்நிலவுகின்றது. எனவேஅந்தக் கடமைகளை நிறைவேற்றுவதற்கு சிரேஷ்ட ஆசிரியர்களை ஆசிரிய வளவாளர்களை நியமிப்பதற்கு ஆளுநரின் அனுமதியைக் கோரினார். ஆளுநர் உடனடியாக அதற்கான அனுமதியை வழங்கினார்.

வெளிமாவட்டங்களில் 7 ஆண்டுகளில் பணியாற்றிய பின்னர் சொந்த மாவட்டங்களுக்கு திரும்பும் ஆசிரியர்கள் பலர், தமது வீட்டுக்கு அருகில் உள்ள பாடசாலையே வழங் கப்பட வேண்டும் என்று கோருகின் றனர். இந்த மனநிலை வளர்ந்து செல்வதாகவும், எதிர்காலத்தில் இது சிக்கலை ஏற்படுத்தக்கூடும் எனவும் கல்விஅமைச்சின்செயலர்குறிப்பிட்டார்.

மேலும் யாழ்ப்பாணத்திலிருந்து தினமும் 4,500 தொடக்கம் 6,000 ஆசிரியர்கள் ஏனைய மாவட்டங் களுக்குச் சென்று வருகின்றனர். இவர்கள் அந்தந்த மாவட்டங்களில் தங்கி நின்று கற்பிப்பதற்கு வசதிகள் உள்ளன. ஆனாலும் இவர்கள் இப்படிச் செல்வதால், பாடசாலை முடிந்தவுடன் அங்கிருந்து புறப்படுகின்றனர். மாணவர்களுக்குமேலதிகவகுப்புகளை நடத்தும் வாய்ப்பும் இல்லாமல் போகின்றது. இவை தொடர்பிலும் கவனம் செலுத்தவேண்டும் எனக் குறிப்பிட்டார்.

வடக்கு மாகாணத்தின் சில பாடசாலைஅதிபர்கள்தேசியமட்டவிளை யாட்டுப்போட்டிக்குச்செல்லும்மாணவர்க ளின் தபால் அடையாள அட்டையில் மோசடி செய்து, வயது கூடியவர்களை குறைந்த வயதுடையர்களின் போட்டிக்கு அனுப்பும் சம்பவங்களும் இடம்பெற்றுள்ளன எனச் செயலர் சுட்டிக்காட்டினார். இதன்போது ஆளுநர், வெற்றி தோல்வி முக்கியமல்ல. ஒழுக்கம்தான் முக்கியம். அவ்வாறான அதிபர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்குமாறு பணித்தார்.

அதேபோல வடக்கு மாகாண கலாசாரப் பிரிவால், பிரதேச செயலக ரீதியான கலாசார நிகழ்வுகளுக்கு வழங்கப்படும் ஒரு லட்சம் ரூபா நிதியை இரண்டரை லட்சம் ரூபா வாக அதிகரிப்பதற்கும், மாவட்ட நிகழ்வுகளுக்கு வழங்கப்படும் நிதியை 5 லட்சம் ரூபாவாக அதிகரிப்பதற்கும் ஆளுநர் அனுமதி வழங்கினார்.

இந்தக்கலந்துரையாடலில், வடக்கு மாகாணஆளுநருடன், வடக்குமாகாண பிரதம செயலர் இ.இளங்கோவன், வடக்கு மாகாண ஆளுநரின் செயலர் மு.நந்தகோபாலன், வடக்கு மாகாண கல்வி பண்பாட்டலுவல்கள் விளையாட்டுத்துறை இளைஞர் விவகார அமைச்சின் செயலர் ம.பற்றிக் டிறஞ்சன், வடக்கு மாகாண கல்விப் பணிப்பாளர், வலயக் கல்விப் பணிப்பாளர் உள்ளிட்ட துறைசார் அதிகாரிகள் கலந்துகொண்டனர்.

### மன்னார் ஆர்ப்பாட்டத்தில்

# வன்முறையைத் தூண்டியோரை கைது செய்வதற்கு நடவடிக்கை



மன்னார் பொது வைத்தியசாலையில் இறந்த இளம் தாயின் மரணத்திற்கு நீதி கோரி புதன்கிழமை மாலை மன்னார் மாவட்ட பொது வைத்தியசாலைக்கு முன் அமைதியாக இடம்பெற்ற மக்கள் போராட்டத்தில் பொது சொத்துக்களை சேதப்படுத்தி வன்முறையை தூண்டும் விதமாக செயற்பட்ட நபர்களைக் கைதுசெய்ய பொலிஸார் நடவடிக்கையைமேற்கொண்டு வருகின்றனர்.

குறிப்பாக வைத்தியசாலைக்குள்நுழைந்துகண்ணாடிகளை சேதமாக்கியவர்கள், பொலிஸார் மீது கற்கள் வீசியவர்கள், ரயர்கள்உள்ளிட்ட பொருள்களைவீதிகளில்எரித்து மக்களின் போராட்டத்தை திசை திருப்பியவர்களை கைதுசெய்யும்நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

வைத்தியசாலை சிசிரிவி கேமரா மற்றும் போராட்டத்தின்போது எடுக்கப்பட்ட காணொளிகளை சேகரித்து அதன் ஊடாக அமைதியான போராட்டத்தை திசைதிருப்பி வன்முறை ஆக்கியவர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளநிலையில் அவர்களைக்கைதுசெய்ய நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

# வடக்கு மற்றும் கிழக்கில் பல்வேறு நன்கொடைகளை வழங்கிய சீனா




வடக்கு மற்றும் கிழக்கில் சீன அரசாங்கத்தின் நிதியுதவியில் பல்வேறு நன்கொடைத் திட்டங்களை சீன அரசாங்கம் முன்னெடுத்து வருகின்றது.

இம் மாதம் 19 ஆம் திகதி முதல் 21 ஆம் திகதி வரை இலங்கைக்கான சீனத் தூதுவர் குய் சென் ஹாங் உள்ளிட்ட குழுவினர் வடக்கு மற்றும் கிழக்கு பகுதிகளுக்கு விஜயம் மேற்கொண்டு அங்கு ஆளுனர்கள், புத்திஜீவிகள், ஊடகவியலாளர்கள்மற்றும் மக்களை சந்தித்து கலந்துரையாடியுள்ளதுடன் சீன அரசின்நிதியுதவியில்பல்வேறுநன்கொடைகளையும் வழங்கியுள்ளனர்.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களுக்கு இவ்வாண்டில் சீன அரசாங்கம் 1.5 பில்லியன் ரூபா மதிப்பீட்டில் வீடமைப்பு, மீன்பிடி உபகரணங்கள் மற்றும் அரிசி ஆகியவற்றை நன்கொடையாக வழங்கியது.

இதன் ஒரு கட்டமாக கடந்த 20 ஆம் திகதி வடமாகாணத்திற்காக 12 மில்லியன் ரூபா பெறுமதியான நன்கொடைத்திட்டங்களை வடமாகாண ஆளுநரிடம் சீனத் தூதுவர் உள்ளிட்ட குழுவினர் கையளித்தனர்.

அத்துடன் கிழக்கு மாகாணத்திற்காக 8 மில்லியன் ரூபா பெறுமதியான நன்கொடைத்திட்டங்களை கிழக்கு மாகாண ஆளுநரிடம் சீன தூதுவர் உள்ளிட்ட குழுவினர் கையளித்தனர்.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் உள்ள களுவன்கேணி கிராமத்திற்கு விஜயம் செய்த சீனத் தூதுவர் உள்ளிட்ட குழுவினர், அக் கிராம மக்களுக்கான வீடுகளை நிர்மாணம் செய்வதற்கும் அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்துவதற்கும் 4 மில்லியன் ரூபா பெறுதியான நன்கொடைகளை வழங்கியுள்ளனர்.

கிழக்கு மாகாணத்திலுள்ள தமிழ் கிராமமான களுவன்கேணி கிராமத்திற்கு பல வருடங்களாக தொடர்ச்சியாக விஜயம் செய்து, அவர்களின் வாழ்வாதாரத்தை மேம்படுத்த பல நன்கொடைகளை வழங்கியுள்ளமை உண்மையிலேயே மகிழ்ச்சியானது என்றும் அவர்களின் வாழ்க்கை தொடர்ந்து மேம்படுவதைக் கண்டு பெருமை அடைகிறேன் என்றும் சீனத் தூதுவர் குய் சென் ஹாங் தெரிவித்துள்ளார்.

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: இல.551 A, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொலைபேசி - 021 222 3000
மின்னஞ்சல் - kalaikkathirnews@gmail.com
இணையம் - onlinekathir.com

## காவல்துறையினர் மீதான நடவடிக்கை வரவேற்கத்தக்கது

யாழ்ப்பாணத்தில் பாலியல் லஞ்சம் கேட்டார்கள், பணத்தைக் கொள்ளடிக்க முயன்றார்கள் என்ற குற்றச்சாட்டுக்களின் கீழ் இரு காவல்துறை அதிகாரிகள் கைது செய்யப்பட்டிருக்கிறார்கள். அவர்கள் இருவரையும் மார்கழி 3 வரையும் நீதிமன்றக் காவலில் வைக்க உத்தரவிடப்பட்டிருக்கின்றது. இது மட்டுமல்ல அண்மைய நாட்களாகவே போதைப் பொருள் கடத்தல் மற்றும் இலஞ்சம் பெறுதல் போன்ற குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடையவர்களாகக் காவல்துறையினர் பலர் கைது செய்யப்பட்டிருக்கின்றார்கள். அது குறித்த செய்திகள் ஊடகங்களில் அடிக்கடி வெளியாகின்றன. தமிழர் பகுதிகளில் மட்டுமன்றி சிங்களப் பகுதிகளிலும் இவ்வாறான கைதுகள் இடம்பெற்றுள்ளன.

இப்படி திடீரென காவல்துறையினர் கைது செய்யப்படுவதற்கு, அதுவும் அதிக எண்ணிக்கையில் கைது செய்யப்படுவதற்கு என்ன காரணம் என்று பிரித்தானிய ஒலிபரப்புக் கூட்டுத்தாபனம் (பிபிஸி) காவல்துறைப் பேச்சாளரிடம் கேள்வி எழுப்பியுள்ளது. அதற்குப் பதலளித்த அவர் பொலிஸ் மா அதிபர் வழங்கிய இறுக்கமான உத்தரவின் பேரில் இந்த நடவடிக்கை எடுக்கப்படுகின்றது என்று தெரிவித்திருக்கின்றார்.

இந்த வருடத்தில் மட்டும் குற்றங்களோடு தொடர்புடைய 298 காவல்துறையினர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர் என்று பேச்சாளர் பிரதிக் காவல் மா அதிபர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

”தவறு செய்யும் காவல்துறையினருக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்குமாறு பதில் காவல் மா அதிபர் பிரியந்த வீரசூரிய பணிப்புரை விடுத்துள்ளார். ஒட்டுமொத்த சமூகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றத்தால் காவல்துறையினரும் இந்த தீவிர நடவடிக்கைகளுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது” என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

நடவடிக்கையின் தீவிரம் எந்தளவிற்கு இருக்கின்றது என்றால் கடந்த 28 நாட்களில் மட்டும் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டனர் என்று குற்றஞ்சாட்டப்பட்ட 15க்கும் மேற்பட்ட காவல்துறை அதிகாரிகள் கைது செய்யப்பட்டு பணி இடைநிறுத்தம் செய்யப்படுமளவிற்கு இருக்கின்றது.

இதுவொரு நல்ல மாற்றம்தான். இலஞ்சம் ஊழலை ஒழிப்பது என்பதைத் தொடங்குவதற்கு காவல்துறையைவிட வேறொரு பொருத்தமான இடம் இருக்கவே முடியாது. ஆனால், அதிலும் குறிப்பிடத்தக்க விடயம் என்னவென்றால், இதுவரை கைது செய்யப்பட்டு பணி இடைநீக்கம் செய்யப்பட்டவர்களில் காவல்துறை உயர் அதிகாரிகள் மிகச் சொற்ப எண்ணிக்கையானவர்கள் மட்டுமே. ஆனால் யதார்த்தத்தில் காவல்துறையின் உயர் அதிகாரிகள் பலரும் இலஞ்சம் ஊழலின் மிக் முக்கிய குற்றவாளிகள் என்பதைப் பொதுமக்கள் நன்கே அறிவர். இந்த நடவடிக்கைகள் ஏவியவர்கள் இருக்க அம்புகளை நோவதற்கு ஒப்பானதாகவே இருக்கின்றன.

அம்புகள் முறித் தெறியப்படும் அதே நேரம் அதனை ஏவியவர்களும் அம்புகள் ஏவப்படுவதை அறிந்தும் இதுவரை கண்டும் காணாமலும் இருந்தவர்களும் கூடத் தண்டிக்கப்படவேண்டும். காவல்துறையில் சட்டத்துக்குப் புறம்பான ஒரு காரியத்தை ஆற்றுவதற்கு மட்டும் லஞ்சம் கொடுக்கும் சூழல் நிலவவில்லை, அவர்களது கடமையை நேர்மையாக நிறைவேற்றுவதற்கே லஞ்சம் கொடுக்கவேண்டிய நிலமையே காணப்பட்டது. அந்த நிலையில் இருந்து காவல்துறையை மீட்டெடுக்க இன்னும் தீவிரமான நடவடிக்கைகள் அவசியமானவை.

அதுமட்டுமல்லாமல் காவல்துறையினர் மதுபானம் அருந்துவதற்குத் தடை விதிக்கவேண்டியதும் கட்டாயம். அவர்கள் லஞ்சம் வாங்குவதற்கான மிக முக்கிய காரணம் தமது நாளாந்த மதுபானத்திற்காகப் பணம் சேகரிப்பதுதான். அதைத் தாண்டிய நோக்கங்களும் இருந்தாலும், வீதியில் போக்குவரத்துப் பணியில் ஈடுபடும் காவல்துறையினர் முதல் காவல் நிலையத்தில் திருடனைப் பிடிக்க பயணப்படும் காவலர் வரையில் தமது மதுபான வேட்டைக்காகவே மக்களிடம் கைகூசாமல் லஞ்சத்திற்குக் கை நீட்டுகிறார்கள் என்கிற கைப்புண்ணை அறிய தனிக் கண்ணாடி அவசியமில்லை. எனவே காவல்துறையினரிடம் இருந்து மதுப் பாவனையை ஒழித்தாலே அரைவாசி ஊழலையும் ஒழித்துவிடமுடியும்.

## ஹரினியின் மனு விசாணைக்கு ஏற்பு

பிரதமர் ஹரினி அமரசூரிய உள்ளிட்டோரினால் தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமை மீறல் மனுவை ஜனவரி 30 விசாரணைக்கு எடுத்துக் கொள்ளுமாறு உயர் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

கடந்தவருடம் நாடாளுமன்றத்திற்கு பிரவேசிக்கும் பொல்துவசந்தியில் தேசிய மக்கள் சக்தியின் பெண்கள் குழுவினர் நடத்திய அமைதிப் போராட்டத்தின் மீது தாக்குதல் நடத்தியதன் மூலம் தமது அடிப்படை மனித உரிமைகளை மீறினர் என்று கூறி அப்போதைய பதில் பொலிஸ் மா அதிபர் தேசபந்து தென்னகோன் உள்ளிட்ட பொலிஸ் அதிகாரிகள் குழுவிற்கு எதிராக இந்த மனு தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த மனு யசந்த கோதாகொட, அச்சல வெங்கப்புலி மற்றும் பிரியந்த பெர்னாண்டோ ஆகிய மூவரடங்கிய உயர் நீதிமன்ற நீதிபதிகள் குழாம் முன்னிலையில் அழைக்கப்பட்ட போது இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது

## நகர அபிவிருத்தி பிரதி அமைச்சர் கடமைகளைப் பெறுப்பேற்றார்

நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு பிரதி அமைச்சர் தனது கடமையை பொறுப்பேற்றுக் கொண்டார்.

நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சின் பிரதி அமைச்சராக பதவியேற்ற டி. பி. சரத் நேற்று பத்தரமுல்லை செத்சிறிபாய 2ஆம் கட்டத்தில் அமைந்துள்ள பிரதியமைச்சரின் அலுவலகத்தில் தனது கடமைகளை ஆரம்பித்தார்.

இந்நிகழ்வில் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சர் அனுரகருணாதிலக, அந்த அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன ஆகியோரும் கலந்துகொண்டனர்.

சமய விவகாரங்களுக்கு முன்னுரிமை அளித்து மகா சங்கத்தின் ஆசீர்வாதத்தையும் பெற்று பிரதியமைச்சர் தனது முதல் கடமை கடிதத்தில் கையொப்பமிட்டார்.

இந்நிகழ்வில் கலந்துகொண்ட அமைச்சின் அதிகாரிகள் மற்றும் ஊடகவியலாளர்களிடம் உரையாற்றிய பிரதியமைச்சர், நகர்ப்புற வீடுகள் மற்றும் கிராமப்புற வீடுகளின் பிரச்சினைகளுக்கு தாம் தலையிட்டு தீர்வுகளை பெற்றுக் கொடுப்பதாக தெரிவித்தார்.

பல்வேறு ஆளும் தரப்பின் கீழ் வீட்டுப் பிரச்சினைக்கு தீர்வு காண முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதிலும் இதுவரை தீர்வு காணப்படவில்லை எனவும், வீட்டு நிர்மாணத்தில் உள்ள குறைபாடுகள் மற்றும் பிரச்சினைகளுக்கு விடயத்துக்குப் பொறுப்பான அமைச்சருடன் இணைந்து தீர்வுகள் வழங்கப்படுமெனவும் மேலும் தெரிவித்தார்.

## குவைத்தில் பணிபுரியும் இலங்கையர்களுக்கு!

குவைத்தில் பணிபுரியும் அனைத்து இலங்கை பணியாளர்களும் உள்துறை அமைச்சினால் அறிவிக்கப்பட்டுள்ள இடங்களில் கைரேகைகளை பதிவு செய்ய வேண்டும் என இலங்கை வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளது.

கைரேகையை வழங்காத வெளிநாட்டினரின் அனைத்து அரசு மற்றும் வங்கி நடவடிக்கைகளும் தடைபடும் என 'தி டைம்ஸ் குவைத்' நாளிதழில் உள்துறை அமைச்சகம் தெரிவித்துள்ளது.

டிசம்பர் 31ஆம் திகதி வரை கைரேகைகளை வழங்குவதற்கான கடைசி திகதி முடிவடையும் என்று குறிப்பிடப்பட்டுள்ளது.

அதன்படி, குவைத் நாட்டைச் சேர்ந்த 'சாஹெல்' செயலியைப் பயன்படுத்தியோ அல்லது 'மெட்டா' மின்னணு முறை மூலமாகவோ கை விரல் அடையாளத்தை உறுதிப்படுத்தி கைரேகையை பதிவு செய்யலாம்.

மேலும், இணைய முறையில் கைரேகைகள் பதிய ஹவாலி, ஃபர்வானியா, அஹ்மத், முபாரக் அல் கபீர், ஜஹ்ரா ஆகிய இடங்களில் அமைந்துள்ள பாதுகாப்பு இயக்குனர் அலுவலகங்களில் இது வைக்கப்பட்டுள்ளதாக வெளிநாட்டு வேலைவாய்ப்பு பணியகம் தெரிவித்துள்ளது.

இது தவிர, அலி சபா அல் சலீம், உம் அல்-ஹைமன் மற்றும் ஜஹ்ரா பகுதிகளில் அமைந்துள்ள நபர்களின் புலனாய்வு பிரிவு அலுவலகங்களில் கைரேகையை மேற்கொள்ளலாம்.

## சீன அரசின் 1996 வீட்டுத் திட்டத்தின் இணை ஒப்பந்தம் கைச்சாத்தானது



குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களின் வாழ்க்கை நிலைமையை மேம்படுத்தும் நோக்கில் சீன அரசாங்கத்தின் 552 மில்லியன் சீன யுவான் நிதியுதவியின் கீழ் 1,888 வீடுகள் மற்றும் 108 மூத்த கலைஞர்களுக்கான வீடுகள் ஆகிய வீட்டுத்திட்டத்தின் இணை ஒப்பந்தம் கைச்சாத்திடும் நிகழ்வு நேற்று (வெள்ளிக்கிழமை) பத்தரமுல்ல, செத்சிறிபாயவில் அமைந்துள்ள நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சில் இடம்பெற்றது.

இந்த ஒப்பந்தத்தில் கைச்சாத்திடும் நிகழ்வில் நகர அபிவிருத்தி, நிர்மாணத்துறை மற்றும் வீடமைப்பு அமைச்சர் கலாநிதி அனுர கருணாதிலக மற்றும் சீனாவுக்கான இலங்கைத் தூதுவர் கிவு சென்ஹோன்ங் ஆகியோர் பங்கேற்றனர்.

இந்நிகழ்வில் சீனத் தூதரகத்தின் பொருளாதார மற்றும் வர்த்தக விவகாரங்களுக்குப் பொறுப்பான ஆலோசகர் டாங் யாண்டி மற்றும் சீனத் தூதரகத்தின் மூத்த அதிகாரிகள் உட்பட திட்டக் கட்டடக்கலை வடிவமைப்பு ஆலோசகர்களுடன் இணைந்து கொண்டனர்.

வீடமைப்பு பிரதி அமைச்சர் டி. பி. சரத், அமைச்சின் செயலாளர் ரஞ்சித் ஆரியரத்ன, நகர அபிவிருத்தி அதிகார சபையின் தலைவர் பொறியியலாளர் எல். பி. குமுதுலால் மற்றும் அமைச்சின் உயர் அதிகாரிகளும் இந்நிகழ்வில் கலந்துகொண்டனர்.

பேலியகொடை, தெமட்டகொட, மொரட்டுவ, மஹரகம ஆகிய இடங்களில் இந்த வீடமைப்புத் திட்டங்கள் நிர்மாணிக்கப்படுவதுடன், கொட்டாவ பிரதேசத்தில் மூத்த கலைஞர்களுக்கான வீட்டுத் திட்டங்கள் நிர்மாணிக்கப்படவிருக்கின்றன.

இந்த வீடமைப்புத் திட்டத்தின் நிர்மாணப் பணிகள் இம்மாதம் ஆரம்பிக்கப்பட்டு மூன்று வருடங்களில் நிறைவடையும்.

### யாழ்ப்பாணத்தில்

# கடும் மழை வெள்ளத்தால் 610 குடும்பங்கள் பாதிப்பு





யாழ்ப்பாணத்தில்தொடர்ச்சியாகபெய்துவரும்அடை மழை காரணமாக ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் ஏனைய அனர்த்தங்களால் 610 குடும்பங்களை சேர்ந்த 2294 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 20 வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன என யாழ்ப்பாண மாவட்ட அனைத்து முக அமைத்துவ பிரிவின் பிரதிபலிப்பாளர் ரி.என்.சூரியராஜா தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் அவர் மேலும் தெரிவிக்கையில் –

சாவகச்சேரி பிரதேச செயலர் பிரிவில் வெள்ள அனர்த்தத்தால் இதுவரை 34 குடும்பங்களைச் சேர்ந்த 108 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஏழு வீடுகளும் பகுதியளவில் சேதம் அடைந்துள்ளன.

ஊர்காவல்துறை பிரதேச செயலர் பிரிவில் 111 குடும்பங்களைச் சேர்ந்த 475 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் இரண்டு வீடுகளும் பகுதியளவில் சேதமடைந்துள்ளன.

பருத்தித்துறை பிரதேச செயலர் பிரிவில் 10 குடும்பங்களை சேர்ந்த 35 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் எட்டு வீடுகளும் பகுதி அளவில் சேதமடைந்துள்ளன.

நல்லூர் பிரதேச செயலர் பிரிவில் வெள்ள அனர்த்தம் மற்றும் இடி மின்னல் தாக்கத்தால் 5 குடும்பங்களைச் சேர்ந்த 14பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதி அளவில் சேதமடைந்துள்ளது.

தெல்லிப்பழை பிரதேச செயலர் பிரிவில் ஏழு குடும்பங்களை சேர்ந்த 21 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சங்கானை பிரதேச செயலர் பிரிவில் 174 குடும்பங்களை சேர்ந்த 641 பேர் வெள்ள அணுத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதியளவில் சேதம் அடைந்துள்ளது.

காரைநகர் பிரதேச செயலர் பிரிவில் 18 குடும்பங்களை சேர்ந்த 68 பேர் வெள்ள அர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

சண்டிலிப்பாய் பிரதேச செயலர் பிரிவில் 145 குடும்பங்களை சேர்ந்த 494 பேர் அர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

கோப்பாய் பிரதேச செயலர் பிரிவில் மூன்று குடும்பங்களை சேர்ந்த 14 பேர் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் வீடு ஒன்றும் பகுதி அளவில் சேதமடைந்துள்ளது.

யாழ்ப்பாணம் பிரதேச செயலர் பிரிவில் 103 குடும்பங்களை சேர்ந்த 424 பேர் வெள்ள அனர்த்தத்தால் பாதிக்கப்பட்டுள்ளனர் என அவர் மேலும் தெரிவித்தார்.

# ருஹூணு பல்கலைக்கழகத்தில் 4ஆவது நாளாகவும் போராட்டம்

ருஹூணு பல்கலைக்கழகத்தில் கல்விசார் மற்றும் கல்விசாரா சங்கங்கள் நேற்று (வெள்ளிக்கிழமை) நான்காம் நாள் பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளதாக பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் கூட்டுக் குழு தெரிவித்துள்ளது.

ருஹூணு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் சுஜீவ அமரசேனவை அப்பதவியில் இருந்து நீக்குமாறு கோரி கல்விசார் மற்றும் கல்விசாரா சங்கங்கள் கடந்த 19ஆம் திகதியிலிருந்து பணிப்பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

இது தொடர்பில் பல்கலைக்கழக தொழிற்சங்கங்களின் கூட்டுக் குழு மற்றும் பல்கலைக்கழக மாணவர்கள் ஆகியோர் இணைந்து பிரதமர் ஹரிணி அமரசூரியவுடன் கலந்துரையாடினர்.

இதேவேளை, ருஹூணு பல்கலைக்கழகத்தின் உபவேந்தர் பேராசிரியர் சுஜீவ அமரசேனவை அப்பதவியில் இருந்து நீக்குமாறு கோரி ருஹூணு பல்கலைக்கழகத்தின் மாணவர் சங்கம் வியாழக்கிழமை கல்வி அமைச்சுக்கு முன்பாக ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

# ஐஸ் போதைப்பொருளுடன் திருட்டு சந்தேகநபர் கைது

தெஹிவளை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றை உடைத்து பெறுமதியான பொருள்களைத் திருடிய சம்பவம் தொடர்பில் தேடப்பட்டு வந்த சந்தேகநபர் ஒருவர் ஐஸ் போதைப்பொருளுடன் வியாழக்கிழமை கல்கிசை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

படோவிட்ட பாலத்திற்கு அருகில் கல்கிசை பொலிஸ் குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கையின் போதே சந்தேக நபர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் படோவிட்ட பிரதேசத்தை சேர்ந்த 29 வயதுடையவர் ஆவார்.

சந்தேகநபரிடமிருந்து 12 கிராம் 150 மில்லிகிராம் ஐஸ் போதைப்பொருள் மற்றும் வாள் என்பன பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர் கடந்த 10ஆம் திகதி தெஹிவளை பொலிஸ் பிரிவிற்கு உட்பட்ட பகுதியில் உள்ள வீடொன்றை உடைத்து மின் உபகரணங்கள், 12 லட்சம் ரூபாவிற்கும் அதிக பெறுமதியான தங்க நகைகள் மற்றும் 04 கையடக்கத் தொலைபேசிகள் உள்ளிட்ட பல்வேறு பொருள்களை திருடியுள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இதனையடுத்து சந்தேக நபர் மேலதிக விசாரணைகளுக்காக கல்கிசை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.



காலைக்கதிர்
Kalaikkathir

# முத்துராஜாவின் தந்தங்களை வெட்ட தாய்லாந்து அதிகாரிகள் தீர்மானம்



இலங்கையில் இருந்து தாய்லாந்துக்கு கொண்டு செல்லப்பட்ட 29 வயதுடைய முத்துராஜா என்ற பிளாய் சக் சுரின் யானையின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்காக அதன் தந்தங்களை வெட்டுவதற்கு கால்நடை வைத்தியர்கள் தீர்மானித்துள்ளனர்.

இந்த யானை தற்போது தாய்லாந்து நாட்டின் லாம்பாங் நகரத்தில் உள்ள தாய் யானைகள் பாதுகாப்பு மையத்தில் உள்ளது.

முத்துராஜா நீண்ட தந்தங்களைகொண்டுள்ளமையால் அதன் நாளாந்த செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளன.

மலைப்பாங்கான பகுதிகளில் செல்லும்போது தந்தங்கள் தரையில் சிக்கி இழுக்கப்படுவதைத் தடுக்க அதன் தலையை தூக்கவேண்டியுள்ளதால் முத்துராஜா பெரும் சிரமங்களை எதிர்கொண்டு வருகிறது.

இது குறித்து கால்நடை வைத்தியர் வாரங்கனா லங்காபின் வியாழக்கிழமை தெரிவிக்கையில் –

யானையின் தந்தங்களின் எடையைக் குறைப்பது தொடர்பில் நிபுணர்களிடம் கலந்துரையாடல் நடைபெற்று வருகிறது. எனினும், எந்தவொரு தீர்மானத்தையும் முன்னெடுக்க பல அமைப்புகளின் கருத்துக்கள் மற்றும் அனுமதி தேவைப்படும்.

ப்ளாய் சாக் சுரின் யானையின் முன் இடதுகாலில் காயம் இருப்பதால் நடமாடுவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. தொடர்ந்து சிகிச்சை அளிக்கப்படுவதால் உடல் நலம் முன்னேற்றம் அடைந்து வருகிறது எனத் தெரிவித்துள்ளார்.

இலங்கையில் முத்துராஜா இரண்டு தசாப்தங்களாக மதநிகழ்வுகளில் பங்கேற்றிருந்ததோடு காயங்களுக்கும் உள்ளாகியிருந்தது.

2001 ஆம் ஆண்டு தாய்லாந்து நாட்டினால் இலங்கைக்கு பரிசாக வழங்கப்பட்ட யானைகளில் முத்துராஜாவும் ஒன்றாகும்.

# கரையோர மார்க்கத்தில் தொடருந்து சேவை பாதிப்பு

தொழில்நுட்பக் கோளாறு காரணமாக கரையோர மார்க்கத்தில் தொடருந்து சேவைகள் நேற்று (வெள்ளிக்கிழமை) தாமதமடைந்துள்ளன.

புஸ்ஸ ரயில் நிலையத்திற்கு அருகில் காலியிலிருந்து கல்கிசை நோக்கி சென்று கொண்டிருந்த ரயில் ஒன்றிலேயே தொழில்நுட்பக் கோளாறு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாக நேற்று காலை இயக்கப்படும் ஏனைய கரையோர மார்க்கத்திலான ரயில் சேவைகளும் தாமதமடையலாம் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# யாழ். பல்கலை கிளிநொச்சி வளாகத்தில் முஸ்லிம் மாணவர்களுக்காக பள்ளிவாசல்





யாழ்.பல்கலைக்கழக கிளிநொச்சி வளாகத்தில் கல்வி பயிலும் முஸ்லீம் மாணவர்களின் வழிபாட்டுக்காக முஸ்லீம் மாணவர் ஒன்றியத்தின் ஏற்பாட்டில் நிர்மாணிக்கப்பட்ட பள்ளிவாசல் நேற்று (வெள்ளிக்கிழமை) திறந்து வைக்கப்பட்டது.



திறந்து வைக்கப்பட்டதைத்தொடர்ந்து விசேட தொழுகையும் இடம்பெற்றது. குறித்த நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ் பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் சிறிசற்குணராஜா கலந்து கொண்டார்.

இந்த நிகழ்வில் பேராசிரியர்கள், விரிவுரையாளர்கள் ,மாணவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர் . (316)

# 500 கோடி ரூபா பெறுமதியான போதைப்பொருள் சிக்கியது

500 கோடி ரூபாவுக்கும் அதிகளவான பெறுமதி கொண்ட 200 கிலோ கிராம் ஹெரோயின் மற்றும் ஐஸ் போதைப்பொருள் மாத்தறை குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் காலி மாபலகம பிரதேசத்தில் வைத்து கைப்பற்றப்பட்டுள்ளது.

அத்துடன், சந்தேகத்தின் பேரில் 10 பேரும் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 18ஆம் திகதி மாத்தறை, கந்தர நுன்னவெல்ல பகுதிக்கு படகு மூலம் போதைப்பொருள் கொண்டு வரப்பட்டுள்ளதாக மாத்தறை குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்குத் தகவல் கிடைத்தது.

இதன்படி, விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார், மாபலகம பிரதேசத்தில் உள்ள வீடொன்றுக்கு வேன் ஒன்றில் போதைப்பொருள் கொண்டு வரப்பட்ட விடயத்தை அறிந்துள்ளனர்.

இதன்போது 200 கிலோவுக்கும் அதிகமான ஐஸ் போதைப்பொருள் மற்றும் 70 கிலோகிராம் ஹெராயின் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளது.

இவற்றின் பெறுமதி 500 கோடி ரூபாய்க்கு அதிகளவாக இருக்கலாம் என பொலிஸார் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# செவனகல பகுதியில் மின்சாரம் தாக்கி நபரொருவர் உயிரிழப்பு

செவனகல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கிரிவெள பகுதியில் வியாழக்கிழமை மின்சாரம் தாக்கி விபத்துக்குள்ளான ஒருவர் உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த நபர் செவனகல வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டதன் பின்னர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் வெலியார, செவனகல பகுதியைச் சேர்ந்த 45 வயதுடையவர் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

வீட்டில் வேலை செய்து கொண்டிருந்த போது மின்சாரம் தாக்கி உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் விசாரணையில் தெரியவந்துள்ளது.

இதேவேளை, மரணம் தொடர்பான மேலதிக விசாரணைகளை செவனகல பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர் எனத் தெரிவித்தனர்.

# தேசிய மக்கள் சக்தியின் அலுவலகம் வவுனியாவில் பிரதி அமைச்சரால் திறப்பு








தேசிய மக்கள் சக்தியின் வன்னி மாவட்ட தலைமை அலுவலகம் வவுனியாவில் கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சரின் பங்கேற்புடன் திறந்து வைக்கப்பட்டது.

வவுனியா கித்துள் வீதியில் குறித்த அலுவலகம் நேற்று (வெள்ளிக்கிழமை) திறந்து வைக்கப்பட்டது.

நிகழ்வில் விருந்தினர்களாக கலந்து.கொண்ட கட்சியின் வவுனியா மாவட்ட அமைப்பாளரும் கூட்டுறவு அபிவிருத்தி பிரதி அமைச்சருமான உபாலி சமரசிங்க மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்களான ம.ஜெகதீஸ்வரன், செ.திலகநாதன் ஆகியோரால் குறித்த அலுவலகம் உத்தியோக பூர்வமாக திறந்து வைக்கப்பட்டது.

அதனைத்தொடர்ந்து நாடாளுமன்ற உறுப்பினர்களாக சத்தியபிரமாணம் செய்துகொண்ட அவர்களுக்கு வரவேற்பு நிகழ்வும் இடம்பெற்றிருந்தது.

நிகழ்வில் கட்சியின் முக்கியஸ்தர்கள், ஆதரவாளர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர். (100)

காலைக்கதிர் Kalaikkathir

## நாணய....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச சுட்டிக்காட்டினார்.

இதற்கு முன்னதாகவும், எதிர்க்கட்சித் தலைவராக இருந்தபோது, சஜித் பிரேமதாச உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தியின் பொருளாதாரக் குழுவில் அங்கத்துவம் வகிக்கும் பலர் சர்வதேச நாணய நிதிய பிரதிநிதிகளுடன்பலசந்தர்ப்பங்களில்நேருக்கு நேர் பேச்சுக்களை நடத்தினர்.

நேற்று நடைபெற்ற இந்தக் கலந்துரையாடலில், எதிர்க்கட்சித் தலைவர் சஜித்பிரேமதாசவுடன்கலாநிதிஹர்ஷடிசில்வா, எரான் விக்கிரமரத்ன, ஹர்ஷன ராஜகருணா, எஸ்.எம்.மரிக்கார், முஜிபுர் ரஹ்மான் மற்றும் வைத்தியர் காவிந்த ஜயவர்தன உள்ளிட்டவர்களும், ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பேராசிரியர் கென்னடி குணவர்தன மற்றும் பொருளியல் தொடர்பான சிரேஷ்ட பேராசிரியர் பிரசன்ன பெரேரா உள்ளிட்டோரும்கலந்துகொண்டனர்.

## ரணிலுக்காக....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நாயக்க தெரிவித்தார்.

தேசியப்பட்டியல்மூலம்அவர்நாடாளுமன்ற உறுப்பினராக நியமிக்கப்பட்டதற்கு ஐக்கிய தேசியக்கட்சியில்இருந்துஎழும்எதிர்ப்புக்களை அடுத்து அவரது கொழும்பில் இல்லத்தில் செய்தியாளர்களிடம் நேற்று இனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவித்ததாவது:

தேர்தலின்போது புதிய ஜனநாயக முன்னணி கட்சியில் போட்டியிட்ட கட்சிகளுடன் மேற்கொண்ட ஒப்பந்தத்தின் அடிப்படையிலேயே புதிய ஜனநாய முன்னணியின் தேசியப் பட்டியலுக்கு எனது பெயரை கட்சியின் செயலாளர் பிரேரித்திருந்தார். ஒப்பந்தம் தொடர்பில் தெரியாத ஒரு சிலரே இந்த விடயம் தொடர்பில் தேவையற்ற கருத்துக்களைத் தெரிவித்து வருகிறார்கள்.

கட்சியின் செயலாளர் சாமிலா பெரேரா சாதாரண ஒருவர் அல்லர். லலித் அத்துலத் முதலியின் நிழலாக இருந்து செயற்பட்ட அனுபவமுள்ள ஒருவர். அப்படிப்பட்ட ஒருவர் வெறுமனே இந்த தீர்மானத்தை எடுக்கவில்லை.

இடம்பெற்று முடிந்த நாடாளுமன்றத் தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணியில் போட்டியிடுவதற்கு 4 கட்சிகள் இணக்கம் தெரிவித்துஒப்பந்தம்கைச்சாத்திட்டிருக்கின்றன. அந்த ஒப்பந்தத்தில் தேர்தலில் புதிய ஜனநாயக முன்னணிக்கு கிடைக்கப்பெறும் தேசியப்பட்டியல் ஆசனத்தில் ஒரு ஆசனம் புதிய ஜனநாயக முன்னணியால் தேசியப் பட்டியலுக்கு பெயரிடப்பட்டிருக்கும் ஒருவருக்கு வழங்கப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டிருக்கிறது. அதன் பிரகாரமே எனது பெயரை தேர்தல் ஆணைக்குழுவுக்கு அனுப்பசெயலாளர்நடவடிக்கைஎடுத்திருந்தார்.

ஐக்கிய தேசிய கட்சியை சேர்ந்த எனக்கு இந்த சந்தர்ப்பம் கிடைத்தமையிட்டு எமது கட்சியினர் அனைவரும் மகிழ்ச்சியடையவேண்டும். ஏனெனில், கடந்த பொதுத் தேர்தலில் எங்களுக்கு ஒரு தேசியப்பட்டியல் ஆசனம் கிடைத்தது. சிலவேளை, இந்த தேசியப்பட்டியல் பதவிக்கு வேறு ஒருவரை செயலாளர் நியமித்திருந்தால், ஐக்கிய தேசிய கட்சிக்கு ஒரு ஆசனம்கூட இல்லாமல் போயிருக்கும். அது தொடர்பில் இவர்கள் சிந்திப்பதில்லை.

அத்துடன் எனது இந்த நியமனத்துக்கு ஐக்கிய தேசிய கட்சியில் 99 வீதமானவர்கள் ஆதரவாக இருக்கின்றனர். ஓரிருவரே இதனை விமர்சித்துக்கொண்டிருக்கின்றனர். இவர்கள்தான் இந்த விடயத்தில் ரணில் விக்ரமசிங்கவை பணயக் கைதியாக வைத்திருக்கின்றனர். அதேநேரம் இந்த ஒப்பந்தம்தொடர்பில்ரணில்விக்ரமசிங்கவுக்கு நன்கு தெரியும். அதனாலே அவர் எதுவும் கதைக்காமல் இருக்கிறார். ஒப்பந்தம் தொடர்பில் தெரியாத கட்சியின் தவிசாளரே எனக்கு எதிரான கருத்துக்களை தெரிவித்து வருகிறார்.

தேசியப் பட்டியலுக்கு ஐக்கிய தேசிய கட்சி சார்பில் தலதா அத்துகோரலவை நியமிக்கவே தீர்மானித்திருந்ததாக அவர் தெரிவிக்கிறார். அவர் எப்படி இவ்வாறு தெரிவிக்க முடியும், நான் இந்த கட்சியில் ரணில் விக்ரமசிங்கவுக்கு பின்னர் இருக்கும் சிரேஷ் உறுப்பினர். கட்சிக்காக பல அர்ப்பணிப்புக்களைச் செய்தவன். அத்துடன் எனது நியமனம் தொடர்பில் கட்சியின் செயற்குழுவில் அனுமதி பெறவில்லை என தெரிவிக்கின்றனர்.

கடந்த நாடாளுமன்ற தேர்தலில் எமக்கு கிடைத்த தேசியப்பட்டியலுக்கு ரணில் விக்ரமசிங்க நாடாளுமன்றம் சென்றார். அவர் ஜனாதிபதியானதும் அவரின் இடத்துக்கு வஜிர அபேவர்தன நியமிக்கப்பட்டார். அப்போது செயற்குழுவில் அனுமதி பெறப்பட்டதா என கேட்கிறேன்.

அத்துடன் எனது இந்த நியமனம் தொடர்பில்விசாரணைநடத்திஎன்னைஐக்கிய தேசிய கட்சியில் இருந்து நீக்க நடவடிக்கை எடுக்கப்படுவதாகத் தெரியவருகிறது. ஆனால், கட்சியின் தலைவர் ரணில் விக்ரமசிங்க என்னை கட்சியில் இருந்து நீக்க ஒருபோதும் நடவடிக்கை எடுக்கமாட்டார். அந்தளவுக்கு அவருக்காக நான் எனது கழுத்தை நீட்டி இருக்கிறேன். எனக்கு எதிராக ரணில் விக்ரமசிங்க எந்தக் கருத்தையும் தெரிவிக்கவில்லை. அவரை சுற்றியிருக்கும் ஒருசிலரே இந்த விடயத்தை பிரச்சினையாக்கி வருகின்றனர் என்றார்

## 35 எம்.பிக்கள்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கிலோ மீற்றர்களுக்குள் வீடற்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள் மாதிவெல வீட்டுத் தொகுதியில் வீட்டைப் பெறமுடியும். அதனைப் பெற நாடாளுமன்ற உறுப்பினர்கள் விண்ணப்பிக்கவேண்டும். இந்த உத்தியோகபூர்வ குடியிருப்பு வளாகத்தில் சுமார் நூற்றி பத்து வீடுகள் உள்ளன.

## 298 பொலிஸார்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

தல்துவ தெரிவித்துள்ளார்.

முன்னரை விட தற்போது பொலிஸ் அதிகாரிகளின்ஒழுக்கமின்மைநடவடிக்கைகள் தொடர்பில் பொலிஸ் திணைக்களம் கடுமையான நடவடிக்கை எடுத்ததன் காரணம் என்னவென்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் நிஹால் தல்துவவிடம் பிபிசி சிங்கள சேவை கேட்டுள்ளது.

அதற்கு பொலிஸ் ஊடகப் பேச்சாளர், 'தவறு செய்யும் பொலிஸ் உத்தியோகத்தர்களுக்கு எதிராக கடும் நடவடிக்கை எடுக்குமாறு பதில் பொலிஸ் மா அதிபர் பிரியந்த வீரசூரிய பணிப்புரை விடுத்துள்ளார்.

இந்த வருடத்தின் இதுவரையான காலப் பகுதியில் 298 பொலிஸ் உத்தியோகத்தர்கள் பணியிலிருந்து இடைநிறுத்தப்பட்டுள்ளனர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

"ஒட்டுமொத்த சமூகத்தில் ஏற்பட்டுள்ள மாற்றத்தால் பொலிஸ் அதிகாரிகளும் இந்தச் சம்பவங்களுக்கு முகம் கொடுக்க வேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது" என்றார்.

இதேவேளை, கடந்த 28 நாட்களில் பல்வேறு முறைகேடுகளில் ஈடுபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட 15க்கும் மேற்பட்ட பொலிஸ்அதிகாரிகள்கைதுசெய்யப்பட்டுபணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர் என்று பொலிஸார் வெளியிட்டுள்ள அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

## இன ....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கருத்து தெரிவித்திருந்தார்.

ஜனாதிபதிக்கு கனடிய தமிழர் பேரவை அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்ட விடயங்களைசுட்டிக்காட்டியேவிமல்வீரவன்ச இந்த குற்றச்சாட்டினை முன்வைத்திருந்தார். இதற்கு பதிலளிக்கும் வகையில் விடுத்துள்ள அறிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்திருக்கின்றார்.அதில் அவர் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, கனடிய தமிழர் பேரவை ஜனாதிபதி மற்றும் தேசிய மக்கள் சக்திக்கு அண்மையில்எழுதியிருந்த கடிதத்தில் இனவாத பிரிவினை வாதக் கருத்துக்கள் இருப்பதாக சொல்லப்படுவதை ஏற்றுக்கொள்ள முடியாது.

அனைவரையும் உள்ளடக்கிய கொள்கைகளுடன் நீதி மற்றும் நியாயமான தீர்வுகளை முன்வைத்தே அந்தக் கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

இந்த கோரிக்கைகள் இன, மத வேறுபாடின்றி அனைத்து இலங்கையர்களும் தங்கள் உரிமைகள் மற்றும் கண்ணியத்தை மதிக்கும் ஒரு சமூகத்தில் இணைந்து வாழ முடியும் என்பதை உறுதிசெய்யும் நோக்கத்துடன் அனுப்பப்பட்டுள்ளது. இலங்கையைப் பொறுத்தவரையில் மிக நீண்ட காலமாக, இனவெறி மற்றும் பிரிவினைவாதத்தை தூண்டும் கருத்துக்கள் மக்களின் உணர்ச்சிகளைக் கையாளவும், சமூகங்களைப் பிளவுபடுத்தவும், குறுகிய அரசியல் நிகழ்ச்சி நிரல்களுக்கு சேவை செய்யவும் ஆயுதமாக்கப்பட்டுள்ளது என்பதை நாங்கள் அறிவோம்.

இந்த தந்திரோபாயம் காலகாலமாக தவறான புரிதல்களை நிலைநிறுத்தியுள்ளது என்பதோடு அவநம்பிக்கையை வளர்த்து, இலங்கையின் சமூக மற்றும் கலாசார ஒற்றுமைக்கு நிரந்தரமான சேதத்தை ஏற்படுத்தியுள்ளது.

இனவாதம்மற்றும்பிரிவினைவாதம்என்ற சொல்லாடல்கள் பல அரசியல்வாதிகளால் தங்கள் சொந்த நலனுக்காக பயன்படுத்தப் பட்டதையும் அதனால் ஏற்பட்ட விளைவுகளையும் அனைவரும் அறிவர். இதுபோன்ற வார்த்தைகள் மக்களின் உணர்வுகளைத்தூண்டிஇனங்களுக்கிடையில் அமைதியின்மையை ஏற்படுத்தி தங்கள் அதிகாரங்களை தக்கவைத்துக்கொள்ளவே பலரால் பயன்படுத்தப்பட்டு வந்தது என்பதையும்நாம்புரிந்துகொள்ளவேண்டும்.

இதுபோன்றகருத்துக்களால்எந்தசாதாரண குடிமகனுக்கும் எந்த நன்மையையும் எப்பொழுதும் நேர்ந்ததில்லை. மாறாக சமூகங்களுக்கிடையில் பிளவுகளை ஆழமாக்கி உண்மையான பிரச்சினைகளில் இருந்து மக்களை திசைதிருப்பி அர்த்தமுள்ள முன்னேற்றங்களை தடுக்கின்றது. இனியும் இவ்வாறான கருத்தாடல்களால் மக்களை ஏமாற்ற நினைப்பதை தவிர்த்து முறையான முன்னேற்றகரமான அனைவரையும் உள்ளடக்கியஅரசியலில்ஈடுபடுவதேசிறந்தது என நாங்கள் குறிப்பிட விரும்புகின்றோம்.

கனடிய தமிழர் பேரவையினால் ஜனாதிபதிக்கும் தேசிய மக்கள் சக்திக்கும் அனுப்பப்பட்ட கடிதத்தில் எந்த இனவாத தேசியவாதகருத்துக்களும்இல்லைஎன்பதையும்அவைநியாயமான,தசாப்தங்களாகதமிழ் மக்களால் எதிர்கொள்ளப்பட்ட பிரச்சினைகளுக்கான தீர்வாகவே அமைந்துள்ளது என்பதையும்நிலைநாட்டவிரும்புகின்றோம்.

உதாரணமாக,

பயங்கரவாதத்தடைச்சட்டத்தைநீக்குதல்:

இந்தச் சட்டம் தமிழ் சமூகங்களுக்கு மட்டுமன்றி சிங்கள தனிநபர்களுக்கும் மற்றவர்களுக்கும் பெரும் துன்பத்தை ஏற்படுத்தியுள்ளது. அதன் தவறான பயன்பாடு தன்னிச்சையான தடுப்புக்காவல்களுக்கும் அடிப்படை உரிமைகளை மீறுவதற்கும் வழிவகுத்தது, அதை ரத்து செய்வது அனைவருக்கும் நீதியை நோக்கிய ஒரு அவசியமான நடவடிக்கையாக கருதப்பட வேண்டும்.

அரசியல் கைதிகளை விடுவித்தல்:

பல நபர்கள் விசாரணையின்றி பல ஆண்டுகளாக தடுப்புக்காவலில் உள்ளனர். நம்பிக்கையை கட்டியெழுப்புவதற்கும் சட்டத்தின் கீழ் நியாயத்தை உறுதிப்படுத்துவதற்கும் அவர்களின் விடுதலை அவசியமாகும்.

காணி உரிமைகள்:

வடக்கு மற்றும் கிழக்கில் படையினரால் ஆக்கிரமிக்கப்பட்ட தனியார் காணிகளை மீள அதன் உரிமையாளர்களிடமே கையளிப்பது என்பதுசரியானஉரிமையைமீட்டெடுப்பதோடு இடம்பெயர்ந்த குடும்பங்கள் அவர்களின் வாழ்க்கையை மீளக் கட்டியெழுப்புவதற்கும் உதவும்.தமிழ்மக்களிடமிருந்துஅபகரிக்கப்பட்ட சட்ட ரீதியாக அவர்களிற்கு உரிமையான காணிகளை திரும்பக்கோருதல் அவர்களின் உரிமை என்றே கருதப்பட வேண்டும்.

கலாசாரமற்றும்மதவழிபாட்டுத்தலங்களை பாதுகாத்தல்:

புனித தளங்கள் மற்றும் கலாசார அடையாளங்களை பாதுகாப்பது அனைத்து சமூகங்களின் அடையாளத்தை பாதுகாக்க மற்றும் பரஸ்பர மரியாதையை மேம்படுத்துவதற்கான முக்கியமான செயற்பாடாகும்.

பிராந்திய பிரதிநிதித்துவத்தை உறுதி செய்தல்:

13ஆவது திருத்தம் போன்ற தற்போதைய அரசியலமைப்பு விதிகளை முழுமையாக செயல்படுத்துவதன் மூலம் அர்த்தமுள்ள பிராந்தியநிர்வாகத்திற்காகவாதிடுவது சமமான நிர்வாகத்தை நோக்கிய ஒரு படியாகும் அன்றி அது பிரிவினைவாதம் அல்ல.

இங்கு குறிப்பிடப்பட்டவை எவையும் பிரிவினைக்கான அல்லது இனவாதத்திற்கான கோரிக்கைகள் அல்ல. அவை உள்ளடக்கம் மற்றும் சமத்துவத்திற்கான அழைப்புகள். ஒரு தேசத்தின்பலம்அதன்அனைத்துகுடிமக்களின் கவலைகளையும் நியாயமாக அங்கீகரித்து நிவர்த்தி செய்யும் திறனில் உள்ளது.

நியாயமான கோரிக்கைகளை மௌனமாக்குவதற்கும் சமூகப் பிளவுகளை ஆழப்படுத்துவதற்கும் பிரிவினைவாத, இனவாத முத்திரைகளும் குற்றச்சாட்டுகளும் பயன்படுத்தப்பட்ட கடந்த காலத்தின் அழிவுகரமான விளையாட்டுகளுக்கு அப்பால் நாம் நகர்வது இன்றியமையாதது.

இத்தகைய அணுகுமுறைகள் நீடித்த துன்பத்தையும் தாமதமான முன்னேற்றத்தையும் மட்டுமே தருகின்றன.

இனவாதம்மற்றும்பிளவுபடுத்தும்அரசியல் உத்திகள் சமூகத்திற்குள் விரிசல்களை ஆழப்படுத்துவதைத் தவிர வேறு எதையும் செய்யவில்லை.

மேலும் இந்த தந்திரோபாயங்களுக்கு அப்பால் செல்ல வேண்டிய நேரம் இது. அனைத்து இலங்கையர்களின் தேவைகளையும் நிவர்த்தி செய்யும் ஆக்கபூர்வமான உரையாடல் மற்றும் நடைமுறை தீர்வுகளில் ஈடுபடுவதற்கான நேரம் இது என்றுள்ளது.

காலைக்கதிர் ஆசிரியர்பீட தொடர்புகளுக்கு
076 3983858
மின்னஞ்சல் முகவரி:
kalaikkathirnews@gmail.com



காலைக்கதிர் Kalaikkathir

# நல்வழியில் நடை பயின்றார் நல்லைநகர் நாவலர் பெருமான்!



நல்லைநகர் என்றாலே எல்லையில்லா இன்பம் வரும்.வல் வினைகள் போக்குகின்ற வடிவேலன் உறையும் இடம்.அந்தவிடம் அமைந்த விதம் அனைத்துக்கும் பெருமைதான்.சொல்ல வல்ல ஒருவர் பிறக்கின்றா ர். அவர் பெயருடன் நல்லை நகரும் இணைந்து விடுகிறது. நல்லை நகர் சேர்ந்ததனால் அவர் புகழ் பெற்றாரா அல்லது அந்தக் கந்தப் பெருமான் அருள் கிடைத்ததால் அவர் புகழ் பெற்றாரா என்று எண்ணிநிற்கும்அளவுக்குஅவர்சிறந்தோங்கி விளங்கினார். அப்படி விளங்கியவர்தான் நல்லைநகர் ஆறுமுக நாவலர் பெருமான்.

கந்தப் பெருமானைத் தன் சிந்தையில் இருத்தி - தன் வாழ்க்கைப் பாதையினை அவர் அமைத்து அதன் வழியில் நடந்தார் எனலாம். கந்தப்பெருமானை மனம்முழுக்க எண்ணிய இருந்த காரணத்தால் கந்த புராணத்தை உயிராக நாவலர் பெருமான் கருதினார். ‘ கந்த புராண கலாசாரம் ‘ என்னும் வகையில் ஒரு புதுமையான கலாசாரம் தோன்றி இன்றளவும் ஈழத்தில் யாழ்மண்ணில்இருப்பதற்குமூலகாரணமாய் நாவலர் பெருமானே அமைந்தார் என்பதை அனைவரும் அகத்தில் இருத்துவது அவசியமாகும்.

நாவலர் பெருமானை ஐந்தாங் குரவர் என்று ஏற்றிப் போற்றும் ஒரு நிலையும் காணப்படுகிறது. சமய குரவர் என்னும் பொழுது சம்பந்தர், அப்பர், சுந்தரர் , மணிவாசகர் வந்து அமைகிறார்கள். யாவருக்கும் இது தெரிந்த விடயந்தான். ஆனால் ஐந்தாம் நிலையில் ஒருவரை இவர்களு டன் எப்படி இணைப்பது ? எவ்வாறு இப்படி ஒரு சிந்தனை எழுந்தது ? என்றெல்லாம் எண்ண வைக்கிறதல்லவா ! இங்குதான் நாவலர் தேர்ந் தெடுத்து நடந்த பாதையினைப் பார்க்க வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.சமய குரவர்கள் என்ன செய் தார்கள் ? அவர்களைக் கோவிலில்களில் வைத்து அவர்களுக்குக் குருபூசை செய்வதற்குக் காரணந்தான் என்ன ? பூசிக்கப்படு கிறார் கள் , கொண்டாடப்படுகிறார்கள் ,உயர்நிலையில் வைக்கப்படுகிறார்கள் - என் றால் அவர்கள் நிச்சயம் சமுதா யத்துக்கு மிகவும் உவப்பான , அவசியமான , செயல்களைச் செய்திருப்பவ ர்களாகத்தான் இருப்பார்கள் என்பது புலனாகி நிற்கிறதல்லவா !

சமயகுரவர்களில் முன்னிற்பவர் சம்பந்தப்பெருமான். அவரின் சம காலத்தவர் அப்பர் பெருமான். இவர்கள் இரு வரும் எங்கள் இன் தமிழை இதயத்தில் வைத்து ஏந்தினார்கள். அது போல் சைவவத்தையும் இதயத்தில் இருத்தி வைத்தார்கள். சைவம் ஒரு கண்ணாயும் தமிழ் மற்றக் கண்ணாயும் இவர்கள் கொண்டார்கள் என்றால் அது மிகை யாகாது.மாற்று மதமும் , வேற்றுக் கலாசாரமும் , தமிழையும் , தமிழ்ப் பண்பாட்டை யும் , சைவத்தையும் , அடக்கி ஒடுக்கி அழிக்கின்ற வகையிலே வந்த பொழுது - அவற்றை அகற்றிட ‘ நாமார்க்கும் குடியல்லோம் ‘ என்னும் துணி வுடன் வந்தவர்கள்தான் சம்பந்தரும் அப்பரும். சம்பந்தர் இளைய வர்.அப்பர் முதிர்ந்தவர். இளமையும் அனுபவமும் இணைந்து ஒரு பெரிய போராட்டமே தமிழகத்தில் நட ந்தது. அந்தப் போராட்டாத்தின் முதல் படைத் தளபதிகளாய் ஆண் டவனைத் துணையாக்கி நின்றவர் கள்தான் சம்பந்தரும் அப்பரும் ஆவர்.

எதனை ஏற்பது ? எதனை விடுவது ? எது பயனானது? என்று மயக்குற்று நின்ற மக்களுக்குத் தலைமை தாங்கி அவர்களை நல்வழியில் நடத்திச் சென்றவர்கள் சம்பந்தரும் அப்பருமே என்பதை மறுத்துரைத்து விடல் இயலாது. சம்பந்தரும் அப்பரும் அக்காலத்தில் பிறந்திருக்கா விட் டால் எங்கள் சைவமும், தமிழுமே காணாமலே போயி ருக்கும். செய்யெனச் சொல்லாமல் தாமே முன்னின்று செயலாக்கி நின்றார்கள். கோவி ல்கள் எழுந்தன. சைவம் தளைத்தது, பிழைத்தது. அவர்களின் பின்னால் சுந்தரர் வருகிறார். மணிவாசகர் வருகிறார். இவர்களும் தங்கா லத்துக்கு எது ஏற்றதோ அதனைச் செவ்வனவே செய்து சைவத் தையும் , தமி ழையும் நிலைபெற வைக்கிறார்கள்.

சமய குரவர்கள் நால்வரின்பின் ஐந்தாம் குரவராக நாவலரைக் கொள்வதற்கு உரிய காரணங்களை அறிவது மிக வும் அவசியமாகும். அதற்கு நாவலர் பெருமானைப் பற்றித் தெரிந்து கொள்ளுவது முக்கியமாகும்.




சைவத்தைத் தலைமேற் கொண்ட குடும்பம் நாவலர் பெருமான் குடும்பம். ஆசார அனுட்டானங்களைக் கடைப் பிடித்த குடும்பம் எம் பெருமானை நீளநினைந்த குடும்பம். சைவம் , தமிழ் இரண்டையும் கண்ணாய்க் கருதிய குடும்பம் அவர் குடும்பம். அந்தக் குடும்பத்தில் பிறந்ததே திருவருள் என்றுதான் எண்ண வேண்டி இருக்கிறது. பிறப்பும் , குடும்பச் சூழலும் வளரும் பருவத்திலேயே நாவலரை நல்ல வழியில் பயணப்படுவதற்கு உரிய கருவை இதயத்தில் பதித்து விட் டது என்று தான் சொல்ல வேண்டும்.திண்ணைப் பள்ளிக்கூடத்தில் தமிழ் இலக்கியங் களை, இலக்கணத்தை , சைவத்தை எல்லாம் கற்றிட நாவலரின் தந்தையார் உறுதுணையாக விளங்கினானர். இளமையில் கல்வி சிலையில் எழுத்து என்பது போல - நாவ லரின் இளமையில் போடப்பட்ட நல்ல உரமானது அவரின் வருங்கால வாழ்வினுக்கு, செயற்பாடுகளுக்கு நற்பாதையாய் அமைந்திருந்தது என்பது உண்மையாகும்.

நாவலர் அவர்கள் வாழ்ந்த காலம் அன்னியர் ஆட்சியின்காலமாகும். அவர்களின்மதம்,கலாசாராம், மொழி செல்வாக்கினைச் செலுத்துவதற்கு முன்வந்த காலமாகும்.அன்னியரை அடிபணிந்தால் அனைத்துமே கிடைக்கும் என்னும் நிலை காணப்பட்ட காலமுமாகும்.அன்னிய அரசுக்கு யார் விசுவாசமாகச் செயற்படுகிறார்களோ அவர் களே நல்ல வசதிகளை, வாய்ப்புகளைப் பெற்று வாழும் வாழ்க்கை நிலவியது என்பதும் மனங்கொள்ளத்தக்கது. இந்தச் சூழலில் நாவலர் பெருமான் ஆங்கிலப் பாடசாலையில் கல்வி கற்கவேண்டி ஏற்படுகிறது. தற்பொழுது யாழ் மத்திய கல்லூரியாய் விளங்கும் கல்லூரியில்த்தான் நாவல ரின் ஆங்கிலக் கல்வி தொடங்கியது. நாவலர் எதையுமே நினையாமல் கற்பதைக் கருத்தாய் எண்ணிக் கற்று யாவரும் மதிக்கும் மாணவனாய் நிமிர்ந்து நின்றார். அன்னிய மொழியான ஆங்கிலத்தில் நல்ல புலமையினையும் பெற்றுக்கொண்டார்.கற்ற பாடசாலையிலேயே கற்பிக்கும் ஆசானாக ஆகும் வாய்ப்பும் அவருக்கு வாய்த்தது.ஆங்கிலம், தமிழ், சமஸ்கிருதம் என்று கற்று தன்னுடைய மொழி ஆற்றலை நாவலர் பெருமான் வளர்த்துக் கொண்டார். கிறீத்தவ பாடசாலை. கிறீத்தவ பாதிரிமார் ஆசிரியர். கிறீத் தவமே அங்கு முழுவதுமாய் இருந்தது. ஆனால் அவை எவையுமே தன்னைத் தொடாதவாறு நாவலர் தம்மைக் காத்து சிறந்த சைவமகனாய் ஆகியே நின்றார். இப்படி அமைந்ததற்கு அடிப்படை காரணம் நாவலர் மனதில் உதித்த நற்பாதை என்றுதான் எண்ண வேண்டி இருக்கிறது.

சமய குரவர்கள் வரவில்லையேல் எங்கள் சைவம் இல்லாமலே போயிருக்கும். சமயகுரவர்களின் வருகை அக்கால த்துக்கு அவசிய மானதாகவே அமைந்தது.ஐந்தாம் குரவராய் போற்றப்படும் நாவலர் வந்திருக்கா விட்டால் எங்கள் சைவமும் இல்லாமல் போயிருக்கும். அன்னியர் ஆளுகையினால் அவர்களின் மதமான கிறீத்தவம் மேலோங்கும் நிலை காணப்பட்டது. அந்த மேலோங்கலால் எங்கள் சைவம் தன்னிலை இழந்து போகாமல் - நிலைபெறச் செய் தவர் நாவலர் பெருமானே ஆவர்.இதனால் ஐந்தாம் குரவராய் சைவத்தைக் காத்திட நாவலர் அன்னியர் ஆட்சிக் காலத்தில் வந்து அமைகிறார் என்பதுதான் உண்மையாகும்.

சைவமும் தமிழும் இணைபிரியாதன. சமயகுரவர்கள் தமிழையே மூச்சாக்கி அதன் வாயிலாகவே சைவத்தின் மேன்மைகளை உணர்ந்திடச் செய்தார்கள். அத்தனையும் திருமுறைகளாக மலர்ந்தன.பண்ணமைந்த தமிழ்ப் பாடல்களாய் மக்கள் மனங்களில் பதிந்து மாற்றத்தை ஏற்படுத்தின. இவையனைத்தும் நாவலர் பெருமான் உள் ளத்தில் நிறைந்தே இருந்தது. சமயகுரவர் காலத்தில் பாடல்கள் மூலமாகவே கருத்துக் களை வெளிப்படுத்துவது வழமையாய் இருந்தது. ஆனால் நாவலர் காலம் அதற்கு உவப்பானதாக இருக் கவி ல்லை. அதனை நன்கு மனதிற் கொண்ட காரணத்தால் புதுப்பாதை வகுத்து அதன் வழியில் நாவலர் பெரு மான் நடக்கத் தொடங்கினார். அந்தப் பாதைதான் வசன நடையாகும்.சைவத்தின் மேன்மைகளை மக்கள் மனத்தில் பதியவைக்க நாவலரின் சிறப்பான வசனநடை கைகொடுத்தது மட்டுமல்லாமல் வெற்றியினை யும் அளித்தது எனலாம்.அவர் தமிழில் வசனத்தைக் கையாண்ட விதத்தைக் கண்ட பரிதிமாற் கலைஞரான தமிழறிஞர் அவரை ‘ வசனநடை கைவந்த வல்லாளர் ‘ என்று வியந்து போற்றினர்.

கோவில்கள் தோறும் அடியார்கள் பின் தொடர சமயகுரவர்கள் திருமுறைகளைப் பாடினார்கள். அது அக்காலத் தேவையாய் ஆகியது. ஆனால் நாவலர் தன்காலத்துக்கு எது ஏற்றதோ அதனைக் கையிலெடு த்து - கோவில்களில் தொடர் விரிவுரைகளை அறிமுகமாக்கி நின்றார். நாவலரைத்தான் முதல் மேடைப் பேச்சாளர் என்றும் கொள்ள லாம். தற்போதைய மேடைப் பேச்சுக்கு வித்திட்டவராகவும் நாவலர் பெருமான் வந்தமைகிறார் என்பது கருத்திருத்த வேண்டியதேயாகும்.சைவசமயக் கருத்துக்களைப் புலப்படுத்த புராண ங்களைக் கையிலெடுக்கிறார் நாவலர் பெருமான். புராணங்களை விரிவுரையாக மக்களுக்கு எடுத்து விள க்குகிறார். அவரின் சொல்லாற்றலும் , பேச் சாற்றலும் மக்களை அவர் வசமாக்கி நிற்கிறது. அவர் எடுத்த முயற்சி வெற்றியாய் அமைகிறது. பேச்சுடன் நின் றுவிடாமல் மிகவும் எளிமையான் வசன நடையில் புரா ணங்களுக்கு விளக்கங்கள் எழுதி அவற்றை மக்கள் மத்தி யில் கொண்டு சேர்க்கிறார். அச்சுக்கூடத்தை நிறுவி அதில் சைவ , தமிழ் நூல்களைப் பதிப்பித்து ஒரு புரட்சியி னையே செய்து விடுகிறார்.இது அவர் தேர்ந்தெடுத்த நல்ல பாதையாய் அமைகிறது எனலாம்.

இலவசமாய் கல்வியினை அளிக்கும் புதுப்பாதையினை நாவலர் பெருமான் தொடங்கி வைக்கிறார். படிக்கும் மாணவர்களுக்கான பாட நூல்களைத் தாமே எழுதி அவற்றை அச்சடித்தும் கொடுக்கின்றார். மாணவர்களின் கல்வி உளவியலை மனதிற் கொண்டு நாவலர் பெருமானின் பாடநூல்கள் அமைந்தி ருந்தன என்பதுதான் மிகவும் முக்கி

9ம் பக்கதொடர்ச்சி ...........

# நல்வழியில் நடை பயின்றார் நல்லைநகர் நாவலர் பெருமான்!

8ம் பக்கதொடர்ச்சி ...........

யமாகும்.தமிழகத்தில் தமிழ்ப்பாட நூல்கள் அக்காலத்தில் வந்தாலும்-அவையெல்லாவற்றையும்விடநாவலர்பெருமானின் பாடநூல்களே சிறந்தது என்று தமிழ் நாட்டவரா லேயே ஏற்றுக் கொள்ளப் பட்டிருக்கிறது என்பது மனங்கொள்ளத்தக்கதாகும். இலக்கியத்தை , இலக்க ணத்தை, இலகுவாக்கிடும் வகையில் நாவலரின் செயற் பாடுகள் அமைந்திருந்தன என்பதை மறுத்துரை த்து விடல் முடியாது. செய்யுளாய் அமைந்திருந்த இலக்கணத்தை யாவரும் விளங்கும் வகையில் அவர் காலத்தில் வசனநடையில் கொண்டுவந்து கொடுத்தமை நாவலரின் புதுப்பாதைதானே !

ஐந்தாம் குரவராக விளங்கும் நாவலர் அஞ்ஞா நெஞ்சனாகவும்விளங்கியிருக்கிறார். தம்மைஎதிர்கொள்ளவந்த அரசின் ஆணையினையே துச்சமாக எண்ணி ‘ நாமார்க்கும் குடியல்லோம் நமனை அஞ்சோம் ‘ என்று வீரமாய் எதிர்து நின்றவர் சமயகுரவரான அப்பர் பெருமான். அப்பர் வழியிலே நமது ஐந்தாம் குரவரும் நடை பயில்கிறார் என்றுதான் சொல்ல வேண்டும்.தன் கருத்துக்கு ஒவ்வாதவற்றை , நீதிக்குப் பாதிப்பான வற்றை , சமூகத்துக்குப் பொருந்தாவற்றை , சைவத்தைத் தூஷிப்பவற்றை : அஞ்ஞாமல் எதிர்க்கின்ற போராளியாக அதாவது கண்டனக் கதாநாயகனாக நாவலர் பெருமான்விளங்கினார்என்பதுஉண்மையாகும்.சைவத்தைத் தாழ்த்தியவர்களை எதிர்த்தார். வால்பிடிப்பாரை எதிர்த்தார். உண்மையினை உண ராமல் ஊதுகுழலாய் ஆகி நிற்பாரை எதிர்த்தார். போலிச் சைவர்களை, போலிக் கிறீத்தவர்களை, எதிர்த் தார். அதுமட்டுமல்ல சமயம் அறியாத குருமாரையும் சாடினார். கண்டனங்களை சிறு துண்டுப் பிர சுரமாக வெளியிட்டார். அத்தனையும் அவரின் தர்ம ஆவேசத்தையே வெளிச்சமாக்கி நின்றது.கண்டனக் கணை களை வீறுடன் விடுபவராய் ஐந்தாம் குரவரான நாவலர் பெருமான் இருந்தார் என்பதை யாவருமே ஒத்துக் கொள்ளுவார்கள்.

குருவினைப் பேணுவதில் பெரும் அக்கறை மிக்கவர் நாவலர் பெருமான். குரு சொல்லினைத் தட்டாமல் விவிலி யத்தை மொழி பெயர்த்துக் கொடுத்து - மிகச்சிறந்த மொழி பெயர்ப்பு என்னும் அங்கீகாரத் தையும் வாங்கிக் கொடுத்தார். அத்துடன் அவர் நின்றுவிடுகிறார். விவிலியத்தை மொழிபெயர்க்கும் வகையில் அவர் அந்தக் கிறீத்தவ வேத நூலினை மனத்தில் நன்கு பதித்தவராகவே ஆகியிருக்கிறார். அதனால் சைவ த்தை எதிர்க்கும் கிறீத்தவ பிரசாரகருக்கு ஏற்ற மறுமொழியினை அளித்திடும் அறிவாற்றல் நாவலர் பெரு மானிடம் நிரம்பியே இருக்கும் நிலை ஏற்பட்டுவிட்டது. தனது சமயத்தையும் , மற்றைச் சமயத்தையும் நன்றாய் அறிந்து உணர்ந்த காரணத்தால் நாவலர் பெருமான் தன் காலத்தில் கதாநாயகனாகவே ஆகி நின்றார் என்பதை மறுத்துரைத்துவிடல் முடியாது அல்லவா !

ஆறுமுகம் என்னும் பெயருடன் தமிழகம் சென்றவர் யாழ்ப்பாணம் திரும்பிடும் வேளை ‘ நாவலர் ‘ என்னும் பட்டத் தினைத் தனதாக்கி ஆறுமுக நாவலர் என்னும் புதுப் பெயருடன் வருகிறார்.நாவன்மையினை மெச்சி திருவாவடு துறை ஆதீனம் இப்பட்டத்தை ஈழத்துத் தமிழ்ப் பெரியாரான ஆறுமுகத்துக்கு வழங் கியிருக்கிறது.பட்டம் என்னவோ அவருடன் இணைந்து கொண்டு விட்டது.அது அவருக்கு மிகவும் பொரு த்தமான பட்டமாகவும் அமை ந்தது என்பதும் உண்மையாகும்.ஆனால் நாவலர் பெருமான் அதனால் தன்னி லையில் மாற்றமுறவில்லை. தன் பாதை எதுவோ அதன்வழியிலேதான் பயணப்பட்டார்.அவர் விரும்பி இரு ந்தால் ஏதாவது ஒரு ஆதீனத்துக்குக் தலைவராய் ஆகி இருக்கலாம்.ஆளணியுடன் வாழ்ந்திருக்கலாம்.அப் படியான எண்ணம் நாவலர் பெருமானிடம் தோன்றவே இல்லை என்பதைக் கருத்திருத்தல் வேண்டும். யாழ்ப்பாணத்தில் கூட தனியனாகவே நின்று செயற் பட்டார். தன் பெயரிலே சபையோ , ஆதீனமோ நிறுவி டவும் அவர் நாட்டங் கொள்ளவில்லை. ‘என்கடன் பணி செய்து கிடப்பதே ‘ என்பதே அவர் வகுத்து நட ந்த பாதையாகி அமைந்தது எனலாம்.

தேடிச் சோறுநிதந் தின்று - பல
சின்னஞ் சிறுகதைகள் பேசி - மனம்
வாடித் துன்பமிக உழன்று - பிறர்
வாடப் பலசெயல்கள் செய்து - நரை
கூடிக் கிழப்பருவ மெய்தி - கொடுங்
கூற்றுக் கிரையெனப்பின் மாயும் - பல
வேடிக்கை மனிதரைப் போலே - நான்
வீழ்வே னென்று நினைத் தாயோ

என்று பாரதி முழங்கியதற்கு ஒப்பாய் நாவலர் பெருமானின் செயற்பாடுகள் அனைத்துமே அமைந்திருந் தன என்பதை நாமனைவருமே மனத்தில் பதித்திடல் அவசியாமாகும்.தனக்குச் சரியெனப் பட்டதை யாருக் குமே அஞ்சாமல் செய்து நின்றவர்தான் எங்கள் வரலாற்று நாயகனாகிய ஐந்தாம் குரவர் நாவலர் பெருமான்.பழமை க்குள் மூழ்கிடாமல் தன்காலத்துக்கு எது உகந்ததோ அதனை மனமிருத்தி செயற்பட்டவர் தான் நாவலர் பெருமான். அதேவேளை மரபினையும் மறந்தாரில்லை என்பதும் நோக்கத்தக்கதாகும். நாவலர் காலத்து நிலைமைக்கு ஏற்ப அவரின் சமயச் சிந்தனை , தமிழ் பற்றிய சிந்தனை, கல்வி பற்றிய சிந்தனை , ஒழுக்கம் பற்றிய சிந்தனை யாவுமே அமைந்திருந்தது.

இலக்கணம் , சமயம் , காப்பியங்கள் என்னும் வகையில் நாற்பத்து நான்கு நூற்களைப் பதிப்பித்திருக்கிறார். இலக்கணம் தொடர்பாகவும் சைவசமயம் தொடர்பாகவும் இருபத்து நான்கு நூல்களை ஆக்கி இருக்கிறார். அத்துடன் அமையாது பதினாறு நூல்களுக்கு உரையும் எழுதியிருக்கின்றார்.வியப்பாக இருக்கிறதல்லவா ? இவ்வளவும் யாருக்காகச் செய்தார் ? யாவுமே மண்ணும் மக்களும் பயனுற வேண்டும் என்னும் உயரிய சிந்த னையால் செய்தார் என்பதுதுதான் உண்மையாகும்.இல்லறத்தினுள் புகுந்து விடாமல் பிரம்சா ரியத்தைக் கடைப்பிடித்து நல்லறமாய் நாவலர் பெருமான் செய்திருக்கிறார் என்பதால் அவர் ஒரு யுகபுருஷராகவே விளங்குகிறார் எனலாம்.

தமிழ்உரைநடையின்தந்தையாய்,தமிழ்மறுமலர்ச்சியின் முன்னோடியாய், சுவடிகளை பதிப்பிப்பதிலும் முன் னோடியாய், மிகவும் சிறந்த தமிழ் வசனநடை வல்லாளராய், சைவசமயத்தின்பெருங்காவலராய்,நல்லைநகர்ஒளிவிளக்காய் நவலர் பெருமான் திகழ்ந்திருக்கிறார். சைவத்தையும், தமிழையும், காத்த தோடு சைவத்துக்கு எவையெவை இன்றியமைதானவோ அவற்றையும் காத்திட வைக்கும் வகையில் நல்லை நகர் நாவலர் பெருமான் தன்னுடைய பாதையினை வகுத்து அதன் வழியில் பயணப்பட்டிருக் கிறார் என்பதை மறுத்துரைத்து விடல் இய லாது.ஐந்தாம் குரவராய் அவரை ஏற்றுவதும் , போற்றுவதும், குரு பூசை நடத்தி அவரை உயர்வாகப் பார்ப்பதும் மிகவும் உகந்த செயலே யாகும்.அவர் தேர்ந்தெடுத்து நடந்த பாதை கார ணமாக அவரை இன்று இலங்கையின் தேசியவீரனாக , தேசியப் பெருமகனாக , அரசாங் கமே அங்கீகரித்து நிற்கும் நிலை ஏற்பட்டிருக்கிறது. முத்தி ரையில் நாவலர் பெருமான் திருமுகத்தை யாவரும் பார்த்திட வைத் திடும் கைங்கரியமும் இலங்கை அரசினால் ஆகியிருக்கிறது.அனைத்துக்கும் அடிப்படை நாவலர் பெரு மான் ‘ நல்வழியைத் தேர்ந்தெடுத்து அதன் வழியில் நடந்ததுதான் ‘ என்பதே உண்மையாகும்.

நல்லைநகர் ஆறுமுக நாவலர் பிறந்திலரேல்

சொல்லு தமிழெங்கே சுருதியெங்கே - எல்லவரும்
ஏத்து புராண ஆகமங்கள் எங்கே ப்ரசங்கம் எங்கே
ஆத்தன் அறிவு எங்கே அறை.

**மகாதேவ ஐயர் ஜெயராமசர்மா**
**மேனாள் தமிழ்மொழிக் கல்வி இயக்குநர்**
**மெல்பேண் .... ஆஸ்திரேலியா**



காலைக்கதிர் Kalaikkathir

# பெற்ற தந்தையை கத்தியால் குத்தி கொன்ற தனயன் கனடாவில் சம்பவம்; தமிழினப் பற்றாளர் மதி இறப்பு

## மகன் பொலிஸாரால் கைது



(சகாதேவராஜா)

பெற்ற தந்தையை கத்தியால் குத்திக் கொலை செய்த அதிர்ச்சி தரும் துயரச் சம்பவம் கனடாவில் வியாழக்கிழமை நள்ளிரவு இடம்பெற்றுள்ளது .

மகனை கனேடிய பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

யாழ்ப்பாணம் அரியாலையைச் சேர்ந்த 66 வயதுடைய குலத்துங்கம் மதிசூடி என்பவரே இவ்வாறு குத்திக் கொலை செய்யப்பட்டவராவார்.

தமிழினப் பற்றாளரும் கனேடிய தமிழ் வானொலி பத்திரிகை துறையின் முன்னோடியும் பிரபல சமூக சேவையாளருமான குலத்துங்கம் மதிசூடி கடந்த 40 வருடங்களாக கனடாவில் வாழ்ந்து வருகின்றார்.

அவ்வப்போது இலங்கைக்கு வந்து பலவிதமான சமூக சேவைகளை வடக்கு கிழக்கில் வழங்கி வந்தவர். வருடமொருமுறை காரைதீவு வந்து செல்கின்றவர். அம்பாறை மாவட்டத்தில் பல சமூக செயற்பாடுகளைச் செய்தவர். அவருக்கு ஒரு மகனும் ஒரு மகளும் உள்ளனர்.

அவரது மகன் இளங்கோ காதல் முறிவு காரணமாக மனநிலை பாதிக்கப்பட்டு இருந்தவர் என்று சொல்லப்படுகிறது.

வியாழக்கிழமை இரவு தாயை ஓர் அறையில் பூட்டிவிட்டு தந்தையை கத்தியால் குத்தி கொலை செய்திருக்கின்றார் என்று அவரது சகோதரி வாக்குமூலம் அளித்துள்ளார்.

உடனடியாக கனடா பொலிஸார் அவரை கைது செய்து காவலில் வைத்துள்ளனர் .

பொலீஸ் விசாரணைகள் தொடர்கின்றன .

கனேடிய ஊடகங்கள் இந்த செய்தியை நேற்று காலை முதல் முக்கியத்துவம் கொடுத்து வெளியிட்டு வருகின்றன.

# சிறந்த தமிழ்பற்றாளர் மதியண்ணாவின் இழப்பு தமிழினத்துக்குப் பேரிழப்பாகும்!

## சமூக செயற்பாட்டாளர் ஜெயசிறில் அனுதாபம்.

(வி.ரி.சகாதேவராஜா)

கனடாவில் வியாழக்கிழமை இரவு துரதிஷ்டவசமாக மரணித்த யாழ் அரியாலையைச் சேர்ந்த சிறந்த தமிழினப்பற்றாளர் குலத்துங்கம் மதிசூடி அண்ணாவின் இழப்பு தமிழ் இனத்திற்கு ஒரு பாரிய பேரிழப்பாகும்.

- இவ்வாறு பிரபல சமூக செயற்பாட்டாளரும், இலங்கை தமிழரசுக்கட்சியின் காரைதீவு தலைவரும் ,மீனாட்சி அம்மன் ஆலய தலைவரும் ,முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தனது அனுதாப அஞ்சலி குறிப்பில் தெரிவித்துள்ளார்.

அவரது திடீர் மறைவு குறித்து கவலையுடன் ஜெயசிறில் மேலும் தெரிவிக்கையில் -

பிறந்த மண்ணை வெகுவாக நேசித்த தமிழினப் பற்றாளர் மதி அண்ணா. கொரோனா காலகட்டத்திலும் வெள்ள அனர்த்த காலகட்டத்திலும் வடக்கில் மாத்திரமல்ல கிழக்கில் அம்பாறை மாவட்டத்திலும் பாரிய சேவைகளை செய்தவர்.

அது மாத்திரமல்ல ஒவ்வொரு வருடமும் வந்து நலிவுற்ற மக்களுக்கு நேரடியாகச் சென்று உதவி செய்து வந்தவர்.

எமது மடத்தடி மீனாட்சி அம்மன் ஆலயத்திலும் சில ஆலோசனைகளை வழங்கி சிறப்பித்து பல ஆக்கபூர்வமான பல திட்டங்களிலும் பங்கெடுத்தவர்.



அவர் தமிழினத்தின் மிகுந்த பற்றாளராக விளங்கியவர். கனடாவில் கடந்த 40 வருடங்களாக தாயக மக்களின் உணர்வுகளை விளங்கிடச் செய்தவர்.

ஆன்மீகத்திலும் அதிக ஈடுபாடு கொண்டவர். இறுதியாக காரைதீவு பாலையடி வாலவிக்னேஸ்வரர் ஆலய கன்னி தேரோட்டத்தில் கலந்து கொள்வதற்காக கனடாவில் இருந்து வந்தவர் . சேவையாளரான அவர் அக்கால கட்டத்தில் மட்டக்களப்பு புதுக்குடியிருப்பில் திறந்து வைத்த சுவாமி விவேகானந்தர் நினைவு பூங்காவையும் ஆர்வத்துடன் பார்வையிட்டவர்.

அவரது இழப்பையிட்டு அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் சார்பாக அவரது குடும்பத்தாருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவித்துக் கொள்கின்றேன். - என்றார்.

# கல்முனை வலயப் பணிப்பாளருக்கு தேசிய சாதனைக்கான கௌரவிப்பு



(நூருல் ஹுதா உமர்)

இறுதியாக வெளியான பெறுபேறுகளின் அடிப்படையில் க.பொ.த. சாதாரண தர பரீட்சையில் இலங்கையில் 2 ஆம் இடத்தை பெற்றமைக்காக கல்முனை வலய கல்விப் பணிப்பாளரை கௌரவிக்கும் நிகழ்வும், மாணவ தலைவர்களுக்கான சின்னம் சூட்டும் நிகழ்வும் சாய்ந்தமருது அல்ஹிலால் வித்தியாலய பாடசாலை சமூகத்தின் ஏற்பாட்டில் பாடசாலை கேட்போர்கூடத்தில் பாடசாலை அதிபர் யூ.எல். நஸார் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கல்முனை வலயக்கல்வி பணிப்பாளர் எம் எஸ் சாஹுல் நஜீம் கலந்து கொண்டார். அவரது கல்வி சேவையை பாராட்டி பாடசாலை சமூகத்தால் நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டது.

இந்நிகழ்வில் சாய்ந்தமருது கோட்டக்கல்வி பணிப்பாளர் திருமதி அஸ்மா மலிக், சாய்ந்தமருது பொலிஸ் நிலைய பொறுப்பு அதிகாரி, சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் எஸ்.எல்.சம்சுதீன், ஆசிரிய ஆலோசகர்கள், பாடசாலை அபிவிருத்திக் நிறைவேற்றுக் குழு செயலாளர் பொறியியலாளர் கமால் நிசாத், பாடசாலை அபிவிருத்தி சங்க உறுப்பினர்கள், பாடசாலை பிரதி மற்றும் உதவி அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவ மாணவிகள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

# கல்முனை கார்மேல் பற்றிமாவில் நேற்றுக் களைகட்டிய ஒளிவிழா

(வி.ரி.சகாதேவராஜா)

கிழக்கில் புகழ்பூத்த கல்முனை கார்மேல் பற்றிமா தேசிய கல்லூரியின் வருடாந்த ஒளி விழா கல்லூரி அதிபர் அருட் சகோதரர் எஸ்.ஈ.றெஜினோல்ட் தலைமையில் நேற்று (வெள்ளிக்கிழமை) சிறப்பாக நடைபெற்றது.

கல்லூரியின் 125 ஆவது ஆண்டைச் சிறப்பிக்கும் வகையில் இதுவரை வாணி விழா மற்றும் மீலாதுன் நபி விழா மிகச் சிறப்பாகவும் பிரமாண்டமாகவும் அண்மையில் நடைபெற்றதை பலரும் பாராட்டியிருந்தனர்.

அந்த வகையில் நேற்று இடம் பெற்ற ஒளி விழாவிலும் அங்கு கண் கவர் கலை நிகழ்ச்சிகள் இடம்பெற்றன. பலரும் பாராட்டினர்.

பிரதம அதிதியாக கிழக்கு பல்கலைக்கழக சிரேஸ்ட விரிவுரையாளர் வடணக்கத்துக்குரிய அருட்தந்தை ஏ.அகஸ்டின் நவரெத்தினம் அடிகளார் கலந்து சிறப்பித்தார் .

மேலும் பல மத பெரியார்கள், முக்கிய பிரமுகர்கள் கலந்து சிறப்பித்தனர் .

முன்னதாக கார்மேல் பற்றிமா கொன்மேன்ற் பெண்கள் கல்லூரியில் இருந்து பாரிய கண்கவர் கலாசார அம்சங்கள் அடங்கிய ஊர்வலம் ஆரம்பமாகியது.

குறித்த பண்பாடு பாரம்பரியம் மிக்க பெரும் கலைத்துவ ஊர்வலம் நேரடியாக பாத்திமா கல்லூரியை அடைந்த பொழுது அங்கு பாரம்பரிய சம்பிரதாய முறைப்படி கலை நிகழ்ச்சிகள் மேடை ஏறின.

நேற்று பாடசாலையின் மூன்றாம் தவணை இறுதி நாள் என்ற காரணத்தினால் நிகழ்ச்சிகளில் மாணவர்கள் மிகுந்த ஆர்வத்துடன் பங்கேற்றனர். அவை மேலும் களை கட்டி இருந்தன.

# மாட்டுடன் மோ.சைக்கிள் மோதியதில் 23 வயதுடைய இளைஞன் உயிரிழப்பு



(தில்சாத் பர்வீஸ்)

அம்பாறை மாவட்டம் சம்மாந்துறை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட அம்பலாந்துறை வீரமுனை பிரதான வீதியில் வீரமுனை நூலகத்திற்கு சற்று தொலைவில் வியாழக்கிழமை இரவு 07.00 மணியளவில் நடைபெற்ற விபத்தில் அலவக்கரை வீதி வீரமுனையை சேர்ந்த மதன் பவி லக்சான் (வயது 23) என்பவரே மரணமடைந்துள்ளார்.

குறித்த மோட்டார் சைக்களில் இளைஞன் வீடு திரும்பும் வழியிலேயே மாட்டுடன் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது குறிப்பிடத்தக்கது.

வீரமுனையை சேர்ந்த மதன் பவி லக்சான் (வயது 23) என்பவரே இவ்விபத்தில் மரணமடைந்துள்ளார்.

விபத்தில் மரணமடைந்தவரின் சடலம் கல்முனை அஷ்ரப் ஞாபகார்த்த வைத்தியசாலையில் வைக்கப்பட்டுள்ளது மேலதிக விசாரணைகளின் பின்னர் உறவினர்களிடம் கையளிக்கப்படும் என பொலிஸார் தெரிவித்தனர்.

சம்மாந்துறை பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# பாலம் இடிந்து விழுந்ததில் நாகொடையில் ஒருவர் சாவு



காலி, நாகொடை பத்தேகம பிரதேசத்தில் கிங் கங்கையின் குறுக்கே உள்ள இரும்புப் பாலம் வியாழக்கிழமை திடீரென இடிந்து விழுந்ததில் ஒருவர் உயிரிழந்துள்ளார் என நாகொடை பொலிஸார் தெரிவித்தனர்.

கெப்பிட்டியாகொட பம்பேதெனிய பிரதேசத்தைச் சேர்ந்த 49 வயதுடைய நபரொருவரே உயிரிழந்துள்ளார்.

உயிரிழந்தவர் வியாழக்கிழமை இரும்புப் பாலத்தில் திருத்தப்பணிகளில் ஈடுபட்டிருந்தபோது இப்பாலம் திடீரென இடிந்து விழுந்துள்ளது.

இதன்போது பாலத்தில் திருத்தப்பணிகளில் ஈடுபட்டிருந்தவர் பாலத்துக்கு அடியில் சிக்கி சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளில் நாகொடை பொலிஸார் ஈடுபட்டு வருகின்றனர்.

காலைக்கதிர் Kalaikkathir

# இன விடுதலைக்காக பாடுபட்ட நாங்கள் மக்கள் தேவைகளைப் பூர்த்திசெய்வோம்

## புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலை புலிகள் கட்சியின் தலைவர் கந்தசாமி இன்பராசா தெரிவிப்பு



இன விடுதலைக்காக போராடிய நாங்கள் ஜனநாயகத்தின் பாதையில் இறங்கியுள்ளோம். எனவே மக்கள் பணிகளை முன்னெடுப்போம் என புனர்வாழ்வளிக்கப்பட்ட தமிழ் விடுதலை புலிகள் கட்சியின் தலைவர் கந்தசாமி இன்பராசா தெரிவித்தார்.

திருகோணமலை நகர சபை மண்டபத்தில் இடம் பெற்ற ஊடக சந்திப்பின் போதே இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்தும் தெரிவிக்கையில் -

அடுத்து வரும் உள்ளூராட்சி மாகாண சபை தேர்தல்களில் வடக்கு கிழக்கு மாகாணங்களில் போட்டியிடுவோம் என்பதுடன் ஜனநாயக போராட்டத்தில் இறங்கிய நாங்கள் மக்கள் தேவைகளை உணர்ந்து அடுத்த முறை நாடாளுமன்ற தேர்தலில் போட்டியிட்டு நாடாளுமன்றம் செல்வோம். இம் முறை வடக்கு கிழக்கில் ஏழு மாவட்டங்களில் சுயேச்சையாக போட்டியிட்டோம். ஆனால் துரதிஸ்டவசமாக ஆசனங்கள் கிடைக்கவில்லை. எதிர்வரும் காலங்களில் தேர்தலில் போட்டியிட்டு மக்கள் பணிகளை முன்னெடுப்போம்.

வடக்கு கிழக்கில் கட்சியின் நிருவாகப் பகுதியில் பல வெற்றிடங்களை நிரப்பியுள்ளோம் இதன் மூலம் முன்னால் போராளிகள் இந்த ஜனநாயக நீரோட்டத்தில் இறங்கி மக்களின் தேவைகளை நிறைவேற்றுவோம். - என்றார்.

# அரசின் நல்ல திட்டங்களுக்கு ஆதரவளிக்க என்றும் தயார்

## திகாமடுல்ல எம்.பி. அஷ்ரப் தாஹிர் உறுதி




10 ஆவது நாடாளுமன்ற முதலாவது அமர்வில் உரையாற்றிய ஜனாதிபதி அரச கொள்கை பிரகடன உரையில் நாட்டினுடைய அபிவிருத்தி, நாட்டினை பொருளாதார நெருக்கடியிலிருந்து மீட்பது, மக்களின் வறுமை நிலையை இல்லாதொழிப்பது மற்றும் விவசாயிகளின் வாழ்க்கை தரத்தை உயர்த்துவது போன்ற பல்வேறு திட்டங்களை முன்வைத்ததுடன் அவற்றை நிறைவேற்றுவதற்கு அனைத்து நாடாளுமன்ற உறுப்பினர்களது ஆதரவையும் வேண்டியிருந்தார். எனவே நாட்டினை கட்டியெழுப்பும் நல்ல திட்டங்களுக்கு ஆதரவளிக்கத் தயார் என திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அஷ்ரப் தாஹிர் தெரிவித்தார்.

தனது முதலாவது நாடாளுமன்ற அமர்வை நிறைவு செய்துவிட்டு ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையிலேயே இவ்வாறு தெரிவித்தார்.

மேலும் அவர் தெரிவிக்கையில் –

தன்னை நாடாளுமன்ற உறுப்பினராக தெரிவு செய்தமைக்காக கட்சியின் தலைமை, கட்சி மத்திய குழு, மாவட்ட மத்திய குழு, சக வேட்பாளர்கள் மற்றும் எனக்குவாக்களித்தஅனைத்துஉடன்பிறப்புக்களுக்கும் எனது மனமார்ந்த நன்றிகளை தெரிப்பதுடன் கடந்த காலங்களிலும் நீங்கள் வழங்கிய பதவிகளை நியாயமாக நேர்மையாக செய்தவன் என்ற வகையில் தனது நாடாளுமன்ற உறுப்பினர் பதவியையும் நேர்மையாகவும் நியாயமாகவும் மக்கள் விரும்புகின்ற வகையில் செயற்படுவதுடன் அபிவிருத்தி மற்றும் உரிமைக்காக தொடர்ந்தும் குரல் கொடுப்பேன் எனவும் தெரிவித்தார்.

அதேபோல், கட்சியின் வளர்ச்சியின் அதிக கவனம் செலுத்துவதுடன்கட்சியின்வளர்ச்சிக்கும்முழுமையாக பங்காற்ற இருப்பதாகவும் திகாமடுல்ல மாவட்டத்தின் கட்சிக்கான நாடாளுமன்ற உறுப்புரிமையை இரண்டாக அதிகரிக்க அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வேன் எனவும் தெரிவித்தார்.




இந்நாளிதழ் யாழ்ப்பாணம் இல.551 A, கஸ்தூரியார் வீதியிலுள்ள Green Media House (Pvt) Ltd.நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 23.11.2024இல் வெளியிடப்பெற்றது